பக்கங்கள்: 14
விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 19 சனிக்கிழமை 03.07.2021 கதிர் 240

**இது ரகசியம் அல்ல!**

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இது மிகமிக முக்கியமான காலகட்டம்.

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் மந்தமாகக் கிடந்த கால ஓட்டத்தில் இது முக்கிய கட்டமாக எனக்குத் தோன்றுகின்றது.

கொழும்பில் நான் பக்கம்02 »

# ஒன்பது தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கின்ற முயற்சியைத் தொடரலாம் என்கிறார் சிறிகாந்தா!



## ரெலோவின் புதிய ஆரம்பத்துக்கு அவரின் பதிலடித் திட்டம் இது!!



யாழ்ப்பாணம், ஜூலை 03

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றுபடுத்தும் முகமாக ரெலோ விடுத்த அழைப்புக்குப் பதிலடி கொடுத்துள்ளது சிறிகாந்தா - சிவாஜிலிங்கம் இணையின் தமிழ்த் தேசியக் கட்சி.

புதிய அழைப்பு முயற்சியை விடுத்து, ஏற்கனவே தங்களது கட்சியின் சிவாஜிலிங்கத்தையும் மற்றும் சி.வீ.கே.சிவஞானத்தையும் ஏற்பாட்டாளர்களாகக் கொண்ட ஒன்பது கட்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கலாம் என்ற சாரப்பட தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறிகாந்தா ☞2

# வெகுவிரைவில் ராஜபக்ஷக்கள் அரசியல் புயலுக்குள் சிக்குவர்!

## தலைமை தாங்கத் தயார் என சம்பிக்க முழக்கம்



ராஜபக்ஷக்களுக்களுக்கு எதிரான எதிர்க்காற்று நாட்டில் சகல திசைகளிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றது. அவை வெகுவிரைவில் ராஜபக்ஷக்களுக்கு எதிரான அரசியல் சூறாவளியாக மாற்றமடையும். அதற்குத் தலைமை தாங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். ☞2

## நூறு மாணவர்களுக்கும் குறைந்த பாடசாலைகளைத் திறக்கத் திட்டம்



நாட்டில் நூறு மாணவர்களுக்கும் குறைவானோரைக் கொண்டுள்ள பாடசாலைகளை ஜூலை மாதத்துக்குள் திறப்பதற்கான திட்டத்தை செயற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நூற்றுக்கும் குறைந்த மாணவர்களைக்கொண்ட 2 ஆயிரத்து 962 பாடசாலைகள் நாட்டில் உள்ளன என்று கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது ☞2

## பிறந்தநாள் கொண்டாடியவர்கள் விடுதியுடன் தனிமைப்படுத்தல்!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

அல்லைப்பிட்டியில் உள்ள விடுதியில் பிறந்தநாள் கொண்டாடிய 19 பேர் அதே விடுதியில் கட்டாய சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், விடுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள நட்சத்திர விடுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 19 பேர் நண்பர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாடுவதற்கு ☞2

## தனிமைப்படுத்தப்பட்டுள்ளன யாழில் இரு நகைக் கடைகள்!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகரில் இரண்டு நகைக் கடைகள் சுகாதாரத்துறையினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உள்ள இரண்டு நகைக் கடைகளே நேற்று முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு நகைக் கடைகளிலும் பணியாற்றுபவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

## தாதிய தொழிற்சங்கத்தின் ஏழு கோரிக்கைகளில் ஐந்துக்கு ஜனாதிபதியிடமிருந்து உடனடித் தீர்வு



### மீதமுள்ளவற்றுக்கு 2022 'பட்ஜட்'டில்

பொதுச்சேவை ஐக்கிய தாதியர் சங்கம் கோரிய ஏழு கோரிக்கைகளில் ஐந்தில் உடனடி தீர்வுகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார். மீதமுள்ள இரண்டு கோரிக்கைகளுக்கு அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி ஒப்புக் கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்துடன் விசேட கலந்துரையாடலின் ☞2

### ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இழக்கப்படும் ஆபத்தையடுத்து

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளை மீளாய்வு செய்யத் தயாராகின்றது இலங்கை

(இ.கலையமுதன்)

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நல்லிணக்கத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை விளக்கமளித்துள்ளது.

இதன்படி தற்போதுள்ள சட்டங்கள், கடந்தகால நடைமுறைகள் மற்றும் சர்வதேச நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளை மறுபரிசீலனை செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஜூன் 25 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவிக்கப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சு ☞2

## வெளிநாடுகளுக்கு பணம் அனுப்புவதில் கட்டுப்பாடு

### விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டார் மஹிந்த



வெளிநாட்டுப் பணம் இலங்கையில் இருந்து வெளியில் செல்வதைக் கட்டுப்படுத்தும் வகையில் நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேசிய, சந்தித்த, ஊடாடிய தரப்புகள் மத்தியில் இருந்து நான் புரிந்து கொண்டது அதுதான்.

நீறு பூத்த நெருப்பாகக் கிடக்கும் இலங்கை விவகாரம், காற்று எழும்பப் பற்றித் தீயாய்ப் பிடிப்பதற்கான சூழமைவு நேர்ந்து வருவதாகத் தோன்றுகின்றது.

இலங்கையை ஒட்டி சர்வதேசம் பிளவுபட்டு நிற்கின்றது. ஒருபுறம் சீனா, பாகிஸ்தான் என்று இலங்கையின் நேச சக்திகள்.

சீன ஆதிக்கத்துக்கு – செல்வாக்குக்கு – சவாலாக 'குவாட்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ள இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்றவை மறுபுறம்.

இராஜதந்திர சொல்லாடல்களிலும், பொருளாதார நெருக்குவாரங்களிலும் மட்டும் கவனத்தைச் செலுத்திய தரப்புகள் அதனையும் தாண்டி ஏதேனும் செய்வது பற்றிய முயற்சிகளில் இருப்பதாகத் தெரிகின்றது.

சர்வதேச தரப்புகளிடம் பெற்ற கடன்களுக்காக அடுத்த தவணைக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் தடுமாறும் கொழும்பு, அதையும் தாண்டி வேறும் பல நெருக்குவாரங்களை சர்வதேச தரப்புகளிடமிருந்து எதிர்கொள்ளப் போகின்றது என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தச் சமயத்தில் தமிழரின் தேசிய அரசியல் ஒரே குரலில் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

எண்பதுகளின் நடுப்பகுதியில், தமிழர் தரப்புகள் பல்வேறு இயக்கங்களாகப் பிளவுபட்டு, முரண்பட்டு, முட்டிக் கொண்டிருந்த காலத்திலும் கூட இதேபோன்ற நெருக்குவாரச் சூழல் ஒன்று வந்தது. அந்தக் காலகட்டத்தில் தமிழர்கள் தமது தேசிய அரசியலை – எதிர்காலத்தை – தீர்மானிப்பதற்காக ஒன்றுபட்டு, ஒரு குரலில் ஒலிக்க வேண்டிய தேவையும் கட்டாயமும் எழுந்தது.

முரண்பட்டு நின்ற தமிழர் தரப்புகள் திம்புவில் யாரும் எதிர்பாராத முறையில் ஒன்றுபட்டு எழுந்தமையைக் கண்டு புதுடில்லியே வியப்பிலும், அதைத் தாண்டிய இயலாமையிலும் முடங்கிப் போன்மையைப் பார்த்தோம்.

இப்போதைக்கு எந்தத் தேர்தலும் இல்லை. மாகாண சபைத் தேர்தலுக்கும் வாய்ப்பும் இல்லை. நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் மூழ்கப் போகின்றது. சர்வதேச இராஜதந்திரத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் கொழும்பு துவளும் ஏதுநிலை ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு.

இந்தச் சமயத்தில் சர்வதேசம் – பிரதானமாக இந்தியா உட்பட்ட சக்திகள் – தமிழர் தரப்பைக் கையாள்வதற்கு வசதியாகவும், நாம் சர்வதேசத்துடன் முறையாக ஊடாடுவதற்கும் எமக்குள் ஒன்றுபட்ட சக்தியாய் – ஒரு குரலில் பேசுபவர்களாய் – ஒன்று திரள வேண்டிய நேரம் நெருங்கி வருகின்றது.

வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற சூழல் அல்ல இது. சர்வதேசத்தில் தமிழர் ஆதரவுத் தரப்புகள் சில தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு நம் பக்கத்தில் ஒன்றுபட்ட – கட்டமைப்பு ரீதியான – ஒருமித்த குரலும் நிலைப்பாடும் அவசியம்.

அற்ப அரசியலுக்காக, எல்லாவற்றுக்கும் குறை சொல்லி குழப்புவது அல்லது சுயநல அரசியலுக்காகக் காய்களை நகர்த்துவது என்ற தற்குறிப் போக்கை விடுத்து, விசால மனப்பான்மையுடன் விடயங்களை அணுகவும், கிட்டக் கூடிய சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவும் நம்மை ஒழுங்குபடுத்திக் கொள்வது மிக மிக முக்கியமாகும்.

எமக்கு சார்பாகக் கனிந்து வரும் இந்தச் சர்வதேச சூழலை சரியாக எதிர் கொள்ளத் தவறுவோமேயானால் மீண்டும் வாய்ப்புக் கிட்டாமலேயே போய்விடும்.

கட்சிகள், குழுக்கள், அணிகள் என்று பிளவுண்டு, ஆளை ஆள் கால்வாரும் அற்பத்தனமான அரசியலை ஒதுக்கி ஒரு புறம் வைத்து விட்டு, மக்கள் நலனுக்காக ஒன்றுபட்டுச் செயற்பட நம் தலைவர்கள் முன்வராவிட்டால் – தொடர்ந்தும் கால் வாரும் அற்பத்தனத்தையும், சுயநலனை முன்னிறுத்தும் அரசியலையும், நமது தலைவர்கள் தொடருவார்களாயின் – நெருங்கி வரும் அற்புதமான வாய்ப்பையும் சந்தர்ப்பத்தையும் கூட நாம் கோட்டை விடுவோம்.

கடவுள் வந்தும் கூட எம்மைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

மேகங்கள் கருக்கின்றன. திரளுகின்றன. மழை கொட்டப் போகின்றது. கிடைப்பதை சேமித்து, விளைச்சலைப் பெருக்கத் தயாராகா விட்டால் வாய்ப்பு வீணாகி விடும்.

இணைந்து செயற்பட மறுக்கும் தமிழ்த் தேசியத் தலைமைகள் அதன் மூலம் வரலாற்றுத் தவறை இழைக்கப்போகின்றன.

அதுவே தமிழர் தலைவிதி என்றால் அதை யாரால் மாற்ற முடியும்...?

– மின்னல் –

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்து அது தொடர்பான அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை துணைக்குழு மற்றும் அதிகாரிகள் குழுவை நியமிக்கவென ஜூன் 21ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற மற்றும் தண்டனை அனுபவித்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 16 பேருக்கு, அரசமைப்பின் 34ஆவது பிரிவின் படி ஜூன் 24ஆந் திகதி ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பு குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெளிவுபடுத்தப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தற்போதைய நல்லிணக்க வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இழப்பீட்டு அலுவலகத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கமளிக்கும் குறித்த கலந்துரையாடலின்போது, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## தாதிய தொழிற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது ஜனாதிபதி இந்த முடிவுகளை எடுத்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

01).தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல்

02).நல்லாட்சி அரசின் காலத்தில் 2017.12.07ஆம் திகதிய 32/2017ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக இடைநிறுத்தப்பட்ட பணிக்குழாம் நிலையை மீண்டும் வழங்குதல்

03). இடைநிறுத்தப்பட்டுள்ள வகுப்பு iii இலிருந்து வகுப்பு ஷ்ஷ் இற்கு பதவி உயர்வை ஐந்தாண்டுகளிலும் மற்றும் வகுப்பு ii இலிருந்து வகுப்பு i க்கு ஏழு ஆண்டுகளிலும் தரம் உயர்த்துதல்

04). ரூ .20,000 வருடாந்த சீருடைக் கொடுப்பனவை வழங்குதல்

05) தற்போதைய 36 மணிநேர வேலை நேரத்தை வாரத்துக்கு ஐந்து நாள்கள் (30 மணிநேரம்) நேரமாகக் கருதுவதை விசேட குழுவொன்றின் ஆய்வுக்கு உட்படுத்தல்

ஆகிய ஐந்து விடயங்களையும் உடனடியாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ரூ.10,000 கொடுப்பனவு மற்றும் 2014.12.24 ஆம் திகதியன்று நிதி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை சம்பளத்தின் 1/100 மேலதிக சேவைக் கொடுப்பனவு ஆகியவற்றை எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்க, ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அதன்படி, பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கம் சமர்ப்பித்த அனைத்து திட்டங்களும் ஜனாதிபதியால் தீர்க்கப்பட்டன.

சுகாதாரத் துறையில் அரசுக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாகவும், தாதிய சேவைக்கு அதிக அங்கீகாரம் அளிப்பதாகவும், தாதிய வல்லுநர்களுக்கு உரிய இடத்தை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஒன்பது தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்திருக்கின்றார்.

ரெலோவின் அழைப்புத் தொடர்பாக அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு தமது கட்சி சார்பில் தாம் அனுப்பி வைத்த பதிலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல்' என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட அந்தப் பதிலின் முழு விவரம் வருமாறு:–

உங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் மெய்நிகர் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு எமது கட்சிக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்புக்கு முதலில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறித்த கலந்துரையாடல் கடந்த வாரம் நிகழவுள்ளதாக அறிவிக்கப்பட்டு, 6 தமிழ்க் கட்சிகளோடு அது மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டு, அந்த ஒத்திவைப்பு தொடர்பில் உங்களால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில், ஒத்திவைப்புக்கான காரணங்கள் உட்பட, பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த பின்னணியில், இப்போது எமது கட்சிக்கும், நாம் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள இன்னுமோர் கட்சியான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது, ஊடக சந்திப்பில் நீங்கள் குறிப்பிட்டதைப் போலவே, 'தவறுகள்' திருத்தப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தி நிற்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

இதே வேளையில், இன்னும் சில கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது எமது கருத்து ஆகும்.

மேலும், இந்த வருடம் தை மாதத்தில் எமது கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைந்த சந்திப்புகள், உங்கள் கட்சி உட்பட 9 தமிழ்க் கட்சிகளின் பங்களிப்போடு ஆக்கபூர்வமாகவும் ஆரோக்கியமாகவும் தொடர்ந்து நடத்தப்பட்டிருந்தும், தீவிரம் அடைந்துள்ள கொரோனா பெருந்தொற்று சூழ்நிலையில் தொடர்நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாமல், அவை ஸ்தம்பிதம் அடைந்ததை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்.

இப்போது, இந்த 9 கட்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தொடர வேண்டும் என்பதும், இந்த செயல் வட்டத்துக்குள் கொண்டு வரப்பட வேண்டிய, வேறு சில தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, எம் இனத்தின் நலன் நாடும் ஒரே நோக்குடன் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதும் எமது விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

தமிழ்க் கட்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான சந்திப்புக்களை ஒழுங்கு செய்வதற்கென ஏற்கெனவே அழைப்பாளர்களாக நியமிக்கப்பட்டு செயற்பட்டு வந்திருந்த திரு. எம்.கே.சிவாஜிலிங்கம், திரு. சி.வி.கே.சிவஞானம் ஆகிய இருவர் ஊடாக, ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப் பதில், சம்பந்தப்பட்ட கட்சிகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் நாம் ஆர்வமாக உள்ளோம்.

விரைவில் ஒருங்கிணைந்த தமிழ்க் கட்சிகளின் நேரடியான சந்திப்பை நடத்த முடியும் என நாம் நம்புகின்றோம்.

உங்கள் அழைப்புக்கு மீண்டும் நன்றி கூறுவதோடு, உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் அன்புரிமையோடு நாடி நிற்கின்றோம்.

## நூறு மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

முதற்கட்டமாக குறித்த பாட சாலைகளைதிறப்பதற்கானதிட்டத்தைசெயற்படுத்த நேற்றுமுன்தினம் ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சுகாதாரத் தரப்பினரின் அனுமதியுடன் 100 மாணவர்களுக்கும் குறைவானோரைக் கொண்ட பாடசாலைகளை இம் மாதத்துக்குள் திறப்பதற்கு கல்வி அமைச்சு முயற்சிக்கின்றது.

எனினும், இதற்கு முன்னர் ஆசிரியர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் 2 இலட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர். இந்நிலையில், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் முதல் கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் – என்றார்.

## வெளிநாடுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி இலங்கையில் தங்கியிருக்கும் புலம்பெயர்ந்தவர்கள் தமக்கான புலம்பெயர் கொடுப்பனவை தமது சொந்த நாட்டுக்கு அனுப்பிவைப்பது வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஆகியன தொடர்பிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் தனக்குறிய அதிகாரங்களுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

## வெகுவிரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பஸில் ராஜபக்ஷவுக்கு எந்த அமைச்சுப் பதவியை வழங்கினாலும் அவரால் எதனையும் செய்ய முடியாது என்பது மூன்று மாதங்களிலேயே வெளிப்படும். ராஜபக்ஷக்கள் நாட்டுக்கு சாபமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா ஒழிப்பு செயற்பாடுகள் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை முகாமைத்துவம் செய்ய முடியாத ராஜபக்ஷக்கள் பாரிய நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளனர். இதன் காரணமாக அரசியல் எதிர்ப்பு புயலொன்று அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் உருவாகிக் கொண்டிருக்கின்றது.

அன்று மஹிந்த காற்றைப் பற்றி கூறினார்கள். இன்று ராஜபக்ஷக்கள் இனி வேண்டாம் என்று கூறி மக்களின் எதிர்க் காற்று ஆரம்பமாகியுள்ளது. சகல துறைகளிலும் ராஜபக்ஷக்களுக்கு வாக்களித்தவர்கள் இன்று அவர்களது செயற்பாடுகளில் அதிருப்தியடைந்து அவர்களுக்கு எதிரான எதிர்க்காற்றுடன் ஒன்றிணைந்துள்ளனர்.

கடந்த ஏப்ரலில் தாய் நாடான அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பஸில் ராஜபக்ஷ தற்போது சுற்றுப் பிரயாணமாக நாடு திரும்பியுள்ளார். அவர் தாய் நாடு செல்ல முன்னர் இலங்கையில் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராகக் காணப்பட்டார். ஆனால், எவ்வித நிதி முகாமைத்துவமும் இன்றி நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள் ளது. நாடு எதிர்கொண்டுள்ள இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு பஸில் ராஜபக்ஷ நிச்சயம் பொறுப்புக் கூறவேண்டும்.

எனவே, தற்போது அவருக்கு நிதி அமைச்சு மாத்திரமல்ல, எந்த அமைச்சை வழங்கினாலும் அவரால் எதையும் செய்ய முடியாது. அமைச்சுப் பதவியை வழங்கி மூன்று மாதங்களுக்குள் அதனைக் கண்டுகொள்ளலாம். பஸில் மாத்திரமல்ல எந்தவொரு ராஜபக்ஷவுக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்று நாம் ஏற்கனவே கூறினோம் – என்றார்.

## பிறந்தநாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்பட்டுள்ளனர்.

அதனை அறிந்த அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், ஊர்காவற்றுறை பொலிஸாருடன் சென்று தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியதாக 19 பேரையும் அந்த விடுதியிலேயே சுயதனிமைப்படுத்தினார்.

அத்துடன், நட்சத்திர விடுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

சுயதனிமைப்படுத்தப்பட்ட அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படும் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# இன்று சூமில் ஆஸி - இலங்கை கல்வியியற் கருத்துவினைப்பாடு

வடக்கு மாகாணக் கல்வி,பண்பாட்டு அலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனின் சிந்தனைக்கமைவாக முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனை இணைப்பாளராகக் கொண்டு நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் கல்வியியற் கருத்துவினைப்பாட்டுக் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றை ஆஸ்திரேலியா – இலங்கை கல்வியியல் சார்ந்த ஆளணியினரிடம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சூம் முறையில் நடைபெறவுள்ளது.

சிட்னி நியு சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர்.இ.அம்பிகைராஜா தொடக்கவுரையை நிகழ்த்தி நிகழ்ச்சியினை ஆரம்பித்து வைக்கின்றார்.

ஆஸ்திரேலியா,சிட்னி கல்வித் திணைக்கள மூத்த ஆசிரியர் திரு.க.நாகேந்திரன் இந்நிகழ்வின் ஏற்பாடுகளைக் கவனிக்கின்றமையுடன் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் வளவாளராகவும் கடமையாற்றுகின்றார்.

ஏனைய ஆஸ்திரேலியா வளவாளர்களாக திருமதி எதேல் வேநாயகம், திருமதி.சிவாஜினி குகதாஸ்,இராஜ சேகரன், திருமதி ராகினி இராமநாதன், பொன்னுத்துரை ஐங்கரன், திருமதி கேமா ஐங்கரன், எஸ்.பீரற்றர்சிங்கம் ஆகியோரும் –

இலங்கை வளவாளர்களாக செயலர் இ.இளங்கோவன் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.பரமானந்தன் மற்றும் விரிவுரையாளர்கள், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, மலையக ஆசிரியர்களும் கல்வித்துறை சார்ந்தவர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றுவர்.

# இலங்கை உட்பட 13 நாடுகளுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தடைவிதிப்பு

கொழும்பு, ஜூலை 03

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இலங்கை உள்ளடங்களாக 13 நாடுகளுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பயணத் தடை விதித்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொது சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் கடந்த வியாழக்கிழமை பயணத்தடை குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளதாக நாட்டு அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, வியட்நாம், நமீபியா, சாம்பியா, காங்கோ, உகாண்டா, சியரா லியோன், லைபீரியா, தென்னாபிரிக்கா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கே இவ்வாறு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விளம்பரசேவைகள் **01.08.2021** ஆம் திகதி முதல் **31.07.2022** ஆம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பெறுகைக்குழு யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது
3. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் **(தொலைபேசி இல 0212215978)** நானாவித இறைவரிப்பகுதியுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. விண்ணப்பிக்க விரும்பும் கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து **05.07.2021** திகதி முதல் **19.07.2021 ஆம்** திகதி வரை **மு.ப 9.00 மணி** தொடக்கம் **பி.ப 3.00** மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாகிய **ரூபா 1,000.00** இனை செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
5. கேள்விகள் **20.07.2021 ஆம்** திகதியன்று முற்பகல் **10.00** மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாகவோ / பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர் விண்ணப்பிக்க விரும்பும் ஒலிபரப்புச் சேவையின் பெயரினை / கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழே உள்ள முகவரியில் வருகைதரும் கேள்விதாரர்கள் / பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் காலத்தின் பின் **(20.07.2021 ஆம் திகதி 10.00 மணி)** உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
6. கீழ் அட்டவணையில் குறிப்பிட்டவாறான கேள்வியின் பிணைப்பொறுப்பினை மாநகர சபையில் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**கேள்வி ஆவணம் வழங்கும்/ பெற்றுக்கொள்ளும் காலம்:-**
**05.07.2021 முதல் 19.07.2021 வரை**
**கேள்வி மூடுதல்/திறத்தல்** :- **20.07.2021 மு.ப 10.00 மணி**

| கேள்வி அடையாள இலக்கம் | கேள்வி விபரம் | மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா மில்லியன்) | ஒப்பந்த காலம் | மீளளிக் கப்படாத தொகை ரூபா | கேள்வி பிணை முறி விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை ரூபா | செலுத்தி யிருக்கும் காலம் |
| MC/N.M.B/F-08/B.01/2021 | நவீனசந்தை கட்டிடத் தொகுதி மேல்மாடி | 1.8 மில்லியன் | 1 வருடம் | 1,000.00 | 36,000.00 | 31.08.2021 |
| MC/S.M/F-08/B.02/2021 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல் | 0.6 மில்லியன் | 1 வருடம் | 1,000.00 | 12,000.00 | 31.08.2021 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாநகரசபை யாழ்ப்பாணம்.**

**Centre for Open and Distance Learning (CODL),**
**University of Jaffna, Sri Lanka**
**(திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)**

## வணிகமாணி பட்டப்படிப்பு 2018/2019 (வெளிவாரி)
## Bachelor of Commerce Degree Programme 2018/2019 (External)

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2021**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

* க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2018 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுயானவர்கள்.

**அல்லது**

* பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக்கொண்டவர்கள்.

**வணிக முதற்தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

* ஏற்கனவே வணிக முதற்தேர்வு அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்பு கோருவோர், உரிய தகைமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு:-** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப் பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:-**
விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப்பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:-**

விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 இணை 89005208000064 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தி செலுத்தி, பற்றுச்சீட்டினை யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அல்லது**

**www.codl.ac.lk** எனும் முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:-**
விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **'வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் - 2018/2019'** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 31.07.2021 (சனிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு **021 222 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**03.07.2021**

# INDIVIDUAL
# ENGLISH CLASSES

K.GANESH (BA. Pera)



Grade - 7 தொடக்கம்
பட்டதாரிகள்,
தொழில் புரிவோர்,
English Medium Courses
செய்பவர்களுக்கு,
Fluent Spoken.

077 766 8725
நீராவியடி , யாழ்ப்பாணம்

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# வேண்டாம் அசிரத்தை!

கோட்டாபய அரசில் பெருங்குறை என்னவென்றால் துறை சார்ந்தோர் – நிபுணர்கள் – முன்வைக்கும் கருத்துக்களை அது பெரும்பாலும் கணக்கெடுப்பதில்லை.

மறுபுறத்தில் எல்லாவற்றையும் – அரசாட்சியையும் நிர்வாகத்தையும் கூட – இராணுவ மயப்படுத்தல் பாணியில் அது கையாள்கின்றது.

கொரோனாப் பேரிடர் தாக்கியிருக்கும் இந்த இக்கட்டுச் சமயத்தில், உலக நாடுகள் எல்லாம் – அமெரிக்காவிலிருந்து சீனா வரை அனைத்துத் தேசங்களுமே – மருத்துவ, சுகாதாரத்துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும், பரிந்துரைகளையும் கவனத்தில் எடுத்து, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, கோட்டா அரசு மட்டும் அதற்கு நேர் விரோதமாக நடக்கின்றது. எதேச்சாதிகாரமாகச் செயற்படுகின்றது.

கொரோனாத் தொற்றைக் கையாள்வதற்கும் அதன் பரவுகையைக் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்ட செயலணியின் தலைவராக இராணுவத் தளபதியை நியமித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'புத்திசாலித்தனமே' அவரின் ஆட்சிப் போக்கை – முறைமையை – அளவிடுவதற்கு நல்ல உதாரணம் தான்.

இந்தப் பின்புலத்தில்தான், 'டெல்டா' என அழைக்கப்படும் பயங்கரமான – வீரியமான – மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய – கொரோனாவின் இந்திய மாறுபாட்டு வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கான சரியான திட்டத்தை அரசாங்கம் இது வரை திட்டமிடவேயில்லை என்று நாட்டில் கொரோனாத் தடுப்புப் பணியில் தீவிரமாகவும், பிரதானமாகவும் பங்கேற்று வரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

இன்றைய பேரிடர் நெருக்கடி நிலையில் இது சிறிய – புறம் தள்ளக் கூடிய – விடயம் அல்ல.

கொரோனாத் தொற்றுப் பரவல் நாட்டில் தொடங்கிய காலத்திலிருந்து பின்பற்றி வரும் செயற்றிட்டத்தையே அரசு தொடருகின்றது என்றும், புதிய நெருக்கடிச் சூழலை எதிர்கொள்வதற்கான புதிய செயற்றிட்டத்தை அரசு முன்வைக்கவில்லை என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண குற்றம் சுமத்தியுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பெயருக்கு ஒரு வழிகாட்டித் திட்டம் அரசினால் வெளியிடப்பட்டது எனினும், புதிய டெல்டா வைரஸை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பு முன் நடவடிக்கை ஏற்பாடுகள் எதனையும் புதிதாக அது கொண்டிருக்கவில்லை என மருத்துவ – சுகாதார வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளுக்கும் இந்தியத் திரிவான டெல்டா ரக கொரோனா வைரஸ் பரவியிருக்கும் சூழலில், அப்படிப் பரவியுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு சரியான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு ஒழுங்குகளை அரசு முன்னெடுக்கவில்லை என்று உபுல் றோஹண தெரிவிக்கின்றார்.

இந்த உதாசீனப் போக்கு – பொறுப்பற்ற செயற்பாடு – பல மோசான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சாதாரண ஒருவரே கூறிவிட முடியும்.

இவ்விடயத்தில் சரியான செயற்றிட்டம் எதுவும் இல்லை என்றால் சில வாரங்களுக்கு முன்பு இந்தியா அனுபவித்த மோசமான நிலைமையை இலங்கை விரைவில் எதிர்கொள்ள வேண்டி வரும் என அவர் விடுக்கும் எச்சரிக்கை புறம் ஒதுக்கத்தக்கதல்ல.

அரசாங்கம் இந்த நிலைமையைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளாவிட்டால் ஒரு பெரிய அழிவைத் தவிர்க்க முடியாது என்று அவர் சுட்டியுள்ளமை அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்கும் காப்பரணை மக்களுக்கு வழங்கும் முகமாக இயன்றளவில் சினோபார்ம் தடுப்பூசிகளை சீனாவிலிருந்து தருவித்து அரசு மக்களுக்குச் செலுத்தி வருகின்றது. காலம் பிந்திய – மெதுவான – நடவடிக்கை என்றாலும், இது வரவேற்கத் தக்கது.

ஆனால், இந்த ரகத் தடுப்பூசி இந்தியத் திரிவான டெல்டா ரக வைரஸ்களுக்கு ஆக முப்பத்தி மூன்று வீதப் பாதுகாப்பையே தர வல்லது என்று நிபுணர்கள் கூறுவது அதிர்ச்சி தருவதாக உள்ளது.

ஆக, சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்கள் டெல்டா ரக வைரஸுக்கு முகம் கொடுப்பதில் சிக்கலை எதிர்கொள்வர் என்ற யதார்த்த நிலையில் –

அந்தத் தடுப்பூசியையே பெரும்பாலும் தனது மக்களுக்குச் செலுத்தி வரும் அரசு, அந்தத் தடுப்பூசிக்கும் தாக்குப் பிடித்துத் தனது வீரியத்தை விபரீதமாக ஏற்படுத்தக் கூடிய டெல்டா வைரஸ் குறித்து அசிரத்தையாக இருப்பது கடைசியில் பேரழிவை ஏற்படுத்தி விடும்.

இது தொடர்பில் – சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் எச்சரிக்கை தொடர்பில் – அரசும் அதிகாரிகளும் சிரத்தை எடுப்பதும் விரைந்து தீர்மானங்களை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகளைத் தாமதமின்றி முன்னெடுப்பதும் அவசியமாகும்.

# யுத்தத்தால் இடம்பெயர்ந்த 98 குடும்பங்களுக்கு வீடுகள்

## திருக்கோவில் பிரதேசத்தில்

( வி.ரி.சகாதேவராஜா)



கடந்தகால யுத்தங்களால் இடம்பெயர்ந்து திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் 98 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற திட்டத்தின்கீழ் வீடமைத்துக் கொடுக்கப்படவிருக்கின்றன என்று திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தெரிவித்தார்.

பிரதேசத்திலுள்ள ஆறு மீள்குடியேற்றக் கிராமங்களில் இந்த 98 வீடுகளும் அமைக்கப்படவிருக்கின்றன. சங்கமன்கிராமம், தாண்டியடி, தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு ,சாகாமம், காஞ்சிரன்குடா ஆகிய ஆறு கிராமங்களில் இவை அமைக்கப்படுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து 6 லட்சம் ரூபாவுக்கும் 10 லட்சம் ரூபாவுக்கும் என இருவகையான வீடுகள் அமைக்கப்படும். அந்த வகையில் 6 லட்சம் ரூபா பெறுமதியான 59 வீடுகளும் 10 லட்சம் ரூபா பெறுமதியான 39 வீடுகளும் அமைக்கப்படவிருக்கின்றன.

இதற்கான முன்னோடிக்கூட்டம் அடுத்த வாரமளவில் மக்களுக்கு நடத்தப்பட்டு உடனடியாக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

முதல்கட்டமாக 73 வீடுகளுக்கான நிதியொதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவற்றின் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழரசு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியால் பல்கலை தெரிவான 9 மாணவருக்கு மடிக்கணனி!





யாழ்ப்பாணம், ஜூலை 03

திருநெல்வேலி பத்திரகாளி உதவும் கரங்கள் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் 2020 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பலவீனமான குடும்பங்களை சேர்ந்த 9 மாணவர்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியால் மடிக்கணனி வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த செயற்திட்டம் மூலம் ஒவ்வொரு மாணவர்களுக்கும் 96 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 9 மடிக்கணனிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு குறித்த மாணவர்களின் பல்கலைக்காலம் முழுவதும் கற்பதற்கான செலவுகளை, மடிக்கணனிக்கு பண உதவி செய்த புலம்பெயர் தேசங்களில் இருக்கும் எமது உறவுகளே பொறுப்பேற்றிருக்கின்றார்கள்.

# விமர்சன அரசியல் செய்பவர்கள் தூக்கத்தில் உளறுகின்றார்கள்

## இ.தொ.காவின் உப செயலாளர் பாரத் அருள்சாமி தெரிவிப்பு



சில பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாகச் செயற்படுகின்றன. அவற்றின் கொட்டத்தை அடக்குவதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க ஆட்டம் ஜுலை முதல் ஆரம்பமாகும் என்று இ.தொ.காவின் உப செயலாளரும், பிரஜாசக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி ,இம்புல்பிட்டிய பிரதேசத்துக்கான குடிதண்ணீர் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த புதன் கிழமை மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முழு போராட்டத்தின் விளைவாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக அயிரம் ரூபா கிடைக்கப்பெற்றது.

கடந்த காலங்களில் சம்பள உயர்வு தொடர்பான நடவடிக்கை கூட்டு ஒப்பந்தம் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தது. அப்போது கூட்டு ஒப்பந்தத்தை அடிமை சாசனம் என விமர்சித்தவர்கள், இன்று கூட்டு ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்.

எமது மக்களுக்கான தொழில் மற்றும் இதர உரிமைகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் வென்றெடுக்கும். கம்பனிகளுடன் எமது பொதுச்செயலாளர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பேச்சுகளை நடத்தி வருகின்றார்.

அதன் அடிப்படையில் நிச்சயம் நிரந்தரத் தீர்வு கிடைக்கும். சில கம்பனிகள் தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்பாடாமல் செயற்பட்டு வருகின்றன. அவற்றுக்கு எதிரான எமது தொழிற்சங்க ஆட்டம் ஜுலை முதல் ஆரம்பமாகும்.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தூங்குகிறதா என கேட்டு சிலர் இன்று விமர்சன அரசியல் நடத்துகின்றனர். இ.தொ.கா. தூங்கவில்லை. களத்தில் இறங்கி கம்பீரமாக செயற்படுகின்றது.

ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்களே, எமது சேவையைக் கண்டு அஞ்சி, திடீரென எழுந்து உளறி, விமர்சன அரசியல் நடத்துகின்றனர். எப்படி தான் விமர்சித்தாலும் மக்கள் எம் பக்கம். அவர்களுக்கான எமது பணிகள் தொடரும் என்றும் தெரிவித்துள்ளார்.

## மேலும் ஒருதொகுதி சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன

சீனாவில் உற்பத்தி செய்யப்படும் ஒருதொகை சினோபோர்ம் தடுப்பூசி டோஸ்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

இதற்கமைய 10 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசி டோஸ்கள் நாட்டை வந்தடைந்துள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

குறித்த தடுப்பூசி டோஸ்கள் தொகை நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 4.30 மணி அளவில் சீனாவின் பீஜிங்கில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்துள்ளன.

குறித்த தடுப்பூசி தொகை மத்திய தடுப்பூசி களஞ்சியத்துக்கு லொறி ஒன்றின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பைஸர் தடுப்பூசிகளின் முதல் சரக்கு எதிர் வரும் திங்கட்கிழமை நாட்டை வந்தடையவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உயர் கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி

உயர் கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு சினோபோர்ம் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டம் நேற்று(வெள்ளிக்கிழமை) முதல் ஆரம்பமாகியுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (11 kg க்கு மேல்)
பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
11 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் | சங்கத்தானை | மல்லாவி
சங்கானை | பளை | மன்னார்
கல்வியங்காடு | கிளிநொச்சி | வவுனியா
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | திருகோணமலை
நெல்லியடி | முல்லைத்தீவு | மட்டக்களப்பு
கைதடி | கனகராயன் குளம் | கொழும்பு

# அரசியல் பழிவாங்கல் தொடர்பில் முறைப்பாடு செய்ய குழு நியமனம்

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும், முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதற்காகவும் விசேட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியால் குறித்த குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக மாத்தளை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக்கடிதம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

தற்போதைய ஆட்சியின்கீழ் பழிவாங்கல் படலம் தொடர்வதாகவும், நேர்மையாகச் செயற்படும்



அரச ஊழியர்கள்கூட ஒடுக்கப்படுகின்றனர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிக விலைக்கு அரிசி விற்றால் ஒரு லட்சம் ரூபா வரை தண்டம்!

### சட்டமூலம் சட்டமா அதிபரிடம்

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களிடம் அறவிடப்படும் அபராதத்தை ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிப்பது தொடர்பான சட்டமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.



அதிகரித்த விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் செயற்பாட்டை முற்றாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன எனத் தொடர்ச்சியாக மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோதுமையின் விலை அதிகரிப்பில் ஈடுபட்ட நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை

கோதுமை மாவின் விலை அதிகரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உணவுப் பொருள்களுக்கான அதிகபட்ச விலை நுகர்வோர் விவகார அதிகாரசபை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், தன்னிச்சையாக விலையை அதிகரிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், விலை அதிகரிப்புக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபையால் எதிர்வரும் நாள்களில் வழக்குத் தொடரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## புங்குடுதீவு கடற்கரையிலும் இறந்த நிலையில் கடலாமை



**கலையமுதன்**

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் – புங்குடுதீவு, நடுத்துருத்தி கடற்கரையில் இறந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த கடலாமை இறந்த நிலையால் கடந்த வியாழக்கிழமை கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று (வெள்ளிக்கிழமை) காலை குறித்த பகுதிக்கு வருகைதந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கடலாமையை உடற்கூற்று பரிசோதனைகளுக்காக எடுத்துச்சென்றுள்ளனர்.

கரையொதுங்கிய குறித்த கடலாமை 38 இஞ்சி நீளமும், 27 இஞ்சி அகலமும் மற்றும் 76 இஞ்சி சுற்றளவுடையதும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமம் ஆடிவேல் உற்சவம் பக்தர்கள் இன்றி நடைபெறும்

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் பக்தர்களின் பங்குபற்றல் இன்றி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தில் சமய சடங்குகளுக்கு மாத்திரம் முன்னுரிமையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆடிவேல் உற்சவம் தொடர்பில் முடிவெடுக்கும் குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள உற்சவத்துக்காக ஐந்து நடன குழுக்களை மாத்திரம் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல்

நாடு முழுவதும் பயனுள்ளதாக இருக்கும் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் ஜூலை 5 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட உள்ளன.

இலங்கையில் தற்போதைய கொவிட் நிலைமையை ஆய்வு செய்த பின்னர் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என்று மேல் மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் வைத்தியர் தம்மிக ஜெயலத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட சிறப்பு தொழில்நுட்பக் குழு அடுத்த சில நாள்களில் நாட்டின் கொவிட் வைரஸ் நிலைமையை ஆய்வு செய்ய உள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மே மாதம் வெளியிட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் மேற்கு மாகாணம் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு தனித்தனியாக விதிமுறைகளை கோடிட்டுக் காட்டுகின்றன.

சுகாதார வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தடையை புறக்கணித்து செயற்பட்ட பல துணிக்கடைகளை அதிகாரிகள் மூட உத்தரவிட்டனர் என வைத்தியர் தம்மிக ஜெயலத் தெரிவித்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 54

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**162.இந்தக் கொலைச் சம்பவங்களுக்குப் பின் சர்வதேசம் சந்திரிகாவுக்கு என்ன அழுத்தங்களை கொடுத்தது? அதே போல் விடுதலைப் புலிகளுக்கும் என்ன அழுத்தங்களை கொடுத்தது?**

இந்த நிகழ்கால, அதற்குக் கிட்டிய கால கட்டத்தின் அரசியல் வரலாறு பற்றிச் சொல்லுமுன் சிலவற்றை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இனப்படுகொலை என்ற அம்சத்தின் இதை எழுதத் தூண்டியது தமிழர்களுக்கு நடந்தது, நடப்பது, இனப் படுகொலையா, இனவழிப்பா, இனச்சுத்திகரிப்பா என்ற சர்ச்சைகள்தான். அது மட்டுமல்ல, அதை வைத்துத் தான் சர்வதேசத்துக்கு ஊடாகத் தமிழ் மக்கள் ஒரு வழியை தங்கள் விடிவிக்குத் தேட வேண்டும் என்ற அபிப்பிராயங்களும் வலுப்பெற்றன. இவற்றைத் தெளிவுபடுத்த நிர்மலா ஜோசப்பும் ஆதரவு தந்து செய்த ஆராய்ச்சிகளினால் அதனை விரிவாக எழுதினேன். எனது ஆக்கங்களை ஊக்குவிக்கும் எனது சகோதரனை நண்பன் முருகபூபதியிடம் ஆக்கங்களின் தன்மை, அவற்றின் நோக்குகள் பற்றி அளவளாவி அவரது அபிப்பிராயங்களை வழமையாக எடுப்பேன். அவர் அவை அதில் பலருக்கும் ஆய்வுகள் செய்யக்கூடிய தகவல்கள் உண்டு, இவை சிங்கள மக்களும் புரிந்து கொள்ளும் முறையில் சிங்களத்திலோ, ஆங்கிலத்



யூத சரித்திர ஆசிரியர் சைமன் டப்னோ

திலோ இல்லை. அவற்றை மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்று விரும்பினார்.

பின்னர் சில அரசியல் நிகழ்வுகளை வரலாற்றுக்கும் இனப்படுகொலைகளை விளங்கப்படுத்த எழுதும் போது, அவரோ இவை நடந்தவை, இவற்றை நடத்திவிட்டு அதை நடத்தியவர்கள் புரிந்து கொள்ளவா போகிறார்கள் என அங்கலாய்த்தார். இன்றைய நிலையிலிருந்து தமிழ் மக்களுக்கு என்ன வழிகள் என்பதை புரிய வைக்க வேண்டும். மீண்டும் பழையபடி தனித்தமிழீழம் என்ற கோஷங்களில் ஏறி அவதிப்பட்டமை போலில்லாமல் இனி இனப்படுகொலை என்ற பாதையில் எவ்வளவு காலம் மக்கள் போவார்கள் என்று அபிப்பிராயம் தந்தார்.

நிர்மலா யோசப் தான் இந்த பதிவுகளை தனது சக மாணவர்களுக்கு அனுப்புகிறார் எனவும் அவர்கள் அவற்றை ஆர்வமாகப் படிக்கிறார்கள் எனவும் அதை யொட்டி ஒவ்வொருவரும் சில சில பகுதிகளில் தங்கள் ஆய்வுகளை மேலும் பிரயோசனம் கூடிய வழியில் செய்கிறார்கள் எனவும், அதேசமயம் சில பழைய வர லாறுகள் தங்களுக்கே தெரியாதமையால் தாங்கள் எல்லோரும் இப்படியா நடந்தது என்று மிக ஆர்வமாக வாசித்துத் தெரிந்து கொள்கிறார் எனவும் கூறினார்.

தளபதி கிட்டுவைப் பற்றி எழுதும் காலங்களில் அவர் மீது அனுதாபத்துடன், ஒன்றும் அறியாத அப்பாவித் தனத்துடன், அவ்வளவு புரிந்துணர்வை பெற்றவர் ஏன் திரும்பினார், எவ்வளவு இழப்பு, வெளிநாடு ஒன்றிலேயே தங்கி அகதிக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கலாமே என அபிப்பிராயப்பட்டார்.

நான் அவரிடம் கிட்டுவைத் தெரியுமா? நீங்கள் ஊரி லிருந்த நாளர்களில் அவரைப்பற்றி அறிந்தீர்களா? என்று கேட்டபோது அவரின் பதில் தூக்கி வாரிப் போட்டது.

அவர் தானும் பல சக மாணவர்களும் அந்தக் காலங் களில் பிறக்கவேயில்லை அல்லது சிறுகுழந்தைகள், அவர்களது பெற்றோர்களோடு அவர்கள் எங்கு போனார்களோ அங்கு போனோம், ஏன் என தெரியாது என சொல்லியமை யதார்த்த நிலையைப் புரிய வைத் தது. இந்த பழைய வரலாறுகளை எல்லோருக்குமாக எழுத வேண்டும் என்று கேட்டார்.

அங்கம் 42 வரை வந்த ஒருவர் – எனக்கு அன்னி யோனியமானவர் – லண்டனில் வசிப்பவர் – உணர்வு பூர்வமாக விடுதலைப் புலிகளை ஆதரித்தவர் – அங்கு நடந்த ஆர்ப்பாட்டங்களில் எல்லாம் பங்கு பற்றியவர் – அவரும் அவரது கணவரும் விடுதலைப்புலிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தவர்கள் – உணர்வால் இன் றும் அப்படியே அவர். அவர் குறிப்பிட்டவை கவனிக்கத் தக்கவை.

"இந்திரா காந்தி இருந்திருந்தால் நாங்கள் பங்களா தேசம் போல் இன்னுமொரு நாட்டை உருவாக்கி இருக் கலாம். நான் ஒரு காலும் அமிர்தலிங்கத்தைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டவனல்ல. அவர் தமிழர் இளைஞர்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தி விட்டுத் தனது இரண்டு மக்களையும் லண்டனிற்கு அனுப்பிவிட்டார் என்று மட்டும் எண்ணியிருந்தேன். உங்கள் கட்டுரைகளைப் படிக்கும் போது இரண்டு பக் கங்களையும் இப்பொழுது புரிந்து கொள்கிறேன். நோர்வே மத்தியஸ்தில் இருந்த பொழுது எங்களிடையே ஓர் அனுபவமிக்க, நம்பிக்கை தரக்கூடிய அரசியல் கட்சி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கவில்லையே என மனம் வருந்தினேன். எழுதிக்கொண்டேயிருங்கள். உங்களுக்கு நல்ல நினைவுகளை" – என்று எழுதினார்.

சம்பவங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் பலர் இந்த வரலாறுகளைப் பதிய வேண்டும் என அன்புடன் கேட்டார்கள்.

இன்னும் சிலர் "நீங்கள் பாலசிங்கத்தை தொடக் கத்திலேயே அறிந்திருந்தீர்கள். போராட்டங்கள் அரும் பிய காலத்தையே அறிவீர்கள். ஏன் எமது போராட்டம் இப்படியானது? அல்லது இப்படியாகும் என்ற சிந்த னைகள் இருந்தனவா? அவற்றை எழுத வேண்டும் என்றார்கள். என்னால் முற்றான வரலாறும் விடைக ளும் தரமுடியாது. அது ஓர் ஆழ்ந்த கடல். அதில் நீந் திய மீன்கள் பல. புறப்பட்ட கப்பல்கள் ஏராளம். ஒவ் வொன்றையும் நானறியேன். அவற்றில் பயணிக்க வில்லை. ஆனால் முடிந்தவரை எழுத முயல்வேன். தற்சமயத்திற்கு எது முக்கியமோ, அதற்கு முக்கியத்து- வம் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் கட்டுமானத்திலும் ஒரு அடுக்கு நியதி இருக்க வேண்டும் என்ற புரிதலும் உண்டு.

1941 ஆம் அண்டு டிசெம்பர் மாதம் ரிகா (Riga) என்ற யூதர்களின் குடியிருப்பை ஜேர்மனியரின் நாஸி மூடி அவர்களை வெளியேற்றிய போது அவர்களில் சைமன் டப்னோ (Simon Dubnow) என்ற பிரசித்த சரித்திர ஆசிரியரை சுட்டுக் கொன்றார்கள். அவருக்கு அப்பொழுது வயது 81. அவர் சாகும் தருவாயில் குடியிருப்பின் மற்ற யூதர்களுக்கு அவர்களின் ஜித்தீஸ் (Yiddish) மொழியில் சத்தம் போட்டு குற்றம் சொல் லும் விதத்தில் அறிவுறுத்தியது "எழுதி, பதியுங்கள்" (ஜித்தீஸில் Shreibt un farshreibt) என்பதுதான். இவ ரது இந்த வார்த்தைகள் எத்தனையோ யூத வரலாற்றுப் பதிவுகளின் முகப்பை அலங்கரித்துள்ளன. அது யூத மக்களிடையே பெரும்பாலும் பேசப்படுவது. அவர்களது வரலாறுகளைப் பல வழிகளில் பதிவதற்கு தூண்டு கோலானது. பல யூதர்கள் இதனை ஒரு புனித கடமை யாக – செய்ய வேண்டிய ஒரு பணியாக – தங்களோடு அந்தக் காலங்களில் இருந்து மறைந்தவர்களின் சரித்திரங்களை சாட்சிகள் என்ற நிலையிலிருந்தோ அல்லது அவர்களது நினைவுகளுக்காகவோ இல்லா விடில் பின்வரும் சமுதாயத்திற்கு ஒரு புரிந்துணர்விற் காகவோ பதியப்பட வேண்டும் என்று கருதி காரியமாற் றினார்கள்.

என்னைப் பொறுத்தளவில் இவற்றை எழுதத் தொடங்கிய நாள் தொட்டு இது வரலாறு அன்றி இது நடந்த காலத்தில் சமுதாய அரங்குகளின் மனச்சாட் சிகளைத் தொட்டு, தமிழ் மக்கள் பட்ட அவஸ்தைகளை, வேதனைகளை உணர்ந்து கொள்ளவும் வேண்டும் என்ற அவாவிருந்தது. அதுமட்டுமல்ல, இவற்றை நடத்தியவர்கள், நடந்தவற்றையும் அவற்றின் விளை வுகளையும் அனுபவிக்கும் இன்றைய தமிழீழ மக்கள், சர்வதேசத்திற்கு முன் அவற்றை உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு மேலதிக அவாவும் இருந்தது. இப்படியான வரலாற்றுப் பதிவின் தெளிவுகள் பல காலங்கள் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கும் புதிர்க ளுக்கு விடையளிக்கும். எப்படி இப்படியான இனப்படு கொலை நடப்புக்கள் உருவாகின, இவ்வளவும் எப்படி நடந்தேறின? அரசாங்கங்கள், அவர்களது துணை யாளர்கள், இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தோர், ஊக்கம் கொடுத்தோர், அதேசமயம் ஏதும் செய்ய வழியில்லாமல் இவற்றை தம்மேல் சுமத்திக் கொண்ட தமிழ் மக்கள் என்பவை ஓரளவு அனுபவத்தினூடாக வந்த தரப்புகள்.

யூதர்களை முடிப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு முகாமான அஸ்வீச் (Auschwitz) இன் தளபதி றடோல்வ் கொஸ் (Rudolph Hoss) தான் எப்படி கொலை களத்



நாஸித் தளபதி றடோல்வ் கொஸ்

திற்கும் போகும் யூதர்களை ஏமாற்றி, வெவ்வேறிடங் களுக்கு மாற்றப்படுகிறார்கள் என்று பொய் கூறி, ஒரு சிறிய ரயில் பாதையை நச்சு வாயு ஏற்றப்படப்போகும் கட்டடத்துக்கு அமைத்து, அவர்கள் ஏற்றப்பட்ட ரயில் பெட்டிகளில் வார்சோ (Warsaw) பியாலிசொக் (Bialystook) போன்ற இடங்களுக்குப் போவதாகக் காட்டி அந்தப் பெயர்களை எழுதிய அட்டைகளை ஒட்டி, ஓரிடத்தில் மேற்படி இடங்களுக்கு மாற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டி அனுப்பி வைத்தான் என்று குறிப்பிடுகிறான். மக்கள் நம்பிப் போனார்கள் சாவின் மேகங்கள் அந்த முகாமில் எங்கும் நிறைந்திருந்தன. ஆனாலும் எந்தவித எதிர்பார்ப்புமன்றி இந்த யூத மக்கள் சில ஆயுதம் தரித்த காவலர்களால் ஏற்றி அனுப்பப்பட்டனர். அவர்கள் திரும்பவில்லை. ஆனால் முகாமின் மற்றவர்களோ போனவர்கள் அந்தக் குறிக் கப்பட்ட இடங்களுக்கு அவர்கள் போய் விட்டார்கள் என நம்பினார்கள். இந்த மக்கள் தாங்களாகவே எந்தப் பிரச்சினையும் தராமல் இப்படி நடந்தமையால் தினசரி எத்தனையோ பேரை முடிக்க முடிந்தது என்று தங்களது ஏற்பாட்டில் பெருமிதம் கொண்டு சாட்சியம் சொன் னான் ஹெஸ்.

இப்படியாக ராஜபக்ஷக்களின் வழி நடத்தல்களில் தம் சுற்றங்களை கையளித்தவர்கள் இன்றும் காணா மல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அலைகின்றார்கள். எதுவித எதிர்பார்ப்புகளுமன்றி முகாம்களுக்குள் பாது காப்புக்கு விடப்படுகிறோம் என்று நம்பி சென்றவர்கள் என்னவானார்கள் என்பது மர்மமாயிற்று.

(வளரும்)

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். இளமையில் கற்பது கல்வெட்டுப் போல மனதில் பதிந்து விடும்.

ஆசிரியர் சிவநாயகம் ஐயாவிடம் சிஷ்ய னாய்ப் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு ஒரு நான்கு வருடங்கள்தான் கிட்டின. 1979 முதல் 1983 ஜுலை வரை.

பூர்வீகத் தொடர்போ என்னவோ, அந்தக் குறுகிய காலத்தில் ஊடகத்துறையில் என்னை நெறிப்படுத்துவதற்கான அடிப்படை விழுமியங் களை அவரது 'தினபதி', 'சிந்தாமணி' பண் ணையில் 'சிலையில் எழுத்து' ஆகப் பதித்துக் கொண்டேன்.

புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியல் கே.கே. இரத்தினசிங்கத்தில் இருந்து, மறைந்த முஸ் லிம் தலைவர் அஷ்ரப் வரை சிவநாயகம் ஐயாவின் ஊடகப் பண்ணையில் வளர்ந்தவர் கள் பலர். அத்துறையில் கொடிகட்டிப் பறந்த வர்கள் - பறப்பவர்கள் - பலர்.

ஆனாலும் கடைசிக் காலம் வரை இத்துறை யில் தனது வாரிசு, சிஷ்யன் என்று சிவநாயகம் ஐயா வாஞ்சையுடன் - உரிமையுடன் - குறிப் பிட்ட பெருமை எனக்குரியது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்குரிய மகுடமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சிவநாயகம் ஐயாவின் இந்தக் கூற்றை, அவரது மறைவுக்குப் பின்னர் அவரது துணை வியார் மங்களம் டீச்சர் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். இப்போது அவரது பிள்ளைகள் வழி மொழிந்து உறுதிப்படுத்துவர்.

அவருடனான எனது ஊடாட்டங்கள் பற் றிய சில சம்பவங்களை விவரிப்பது சமகால ஊடக வியலாளர்களுக்கு சரியான அனுபவப் பகிர்வாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதைக் குறிப்பிட முன்னர், பின்னாளில் 'உதயன்', 'சஞ்சீவி', 'சுடர்ஒளி' பத்திரிகைகளில் எனது ஊடக அனுபவங்களைத் தொகுத்து நான் வெளியிட்ட 'என் எழுத்தாயுதம்' நூலின் 'நன்றியோடு சில நினைவுகள்' என்ற தலைப்பில் நான் வரைந்த நினைவுக் குறிப்பின் ஒரு பகுதியை இங்கு மீட்பது பொருத்தமானது என நினைக்கிறேன்.

**நன்றியோடு சில நினைவுகள்**

*எனது பத்திரிகைத்துறை அனுபவம் நீண்டது. சுமார் மூன்றரை தசாப்த கால நீட்சியுடையது. ஈழத் தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத் தைப் போல அதுவும் பல கொந்தளிப்பு மிக்க நெருக்கடிகளையும் துன்பியல் நிகழ்வுகளையும் பேரிடர்களையும் உள்ளடக்கியது.*

*எழுபதுகளின் கடைசியிலே ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலகட்டத்தில்தான் பத்திரிகைத்துறைப் பாதையில் பேனா என்ற எழுத்தாயுதத்தை நான் தூக்கினேன். சுமார் மூன்று தசாப்தங்கள் நெருப்பாய்க் கனன்ற ஈழத்தமிழர்களின் ஆயுதங்கள் 2009 இல் ஓய்ந்து, ஒருவருடத்தின் பின் 2010 இல் பத்திரிகைத் துறையில் எனது பணியின் ஒரு பிரதான கட்டமும் ஓய்வுக்கு வந் தது.*

*இந்தக் காலகட்டத்தில் - குறிப்பாக 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளில் - எனக்குக் கிட்டிய பட்ட றிவை இந்நூல் ஊடாகப் பகிரும் இச்சமயத்தில் இந்த நீண்ட வரலாற்றுப் பாதையில் சிலருக்கு விசேடமாக நன்றி கூற விரும்புகிறேன்.*

*எனது தந்தையார் ஆழமாக வாசிக்கும் பண்பு டையவர். ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் போன்ற வற்றிலே புலமையுடையவர். சிறுவயதிலேயே வாசிப்பு அல்லது தேடல் என்ற பண்பியல்பை எனக்கும் எனது சகோதரர்களுக்கும் போதித்துப் புகட்டியவர். அமை தியும் சாந்தமும் கோபம் கொள்ளாமையும் அவரிடம் நாம் பார்த்து வியந்த குணவியல்புகள். எழுத்தும் வாசிப்பும் அவர் வழியாய் எனக்குக் கிட்டிய சொத் துக்கள் - முதுசொம் - என்பேன்.*

*சட்டத்தரணிக்கான கல்வியையும் பரீட்சைகளை யும் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி செய்த பின்னரும் பத்திரிகைத்துறையின் மீதான ஈடுபாடு காரணமாக அக்கல்வியை இடைநடுவில் கைவிட்டு, எழுத்துத் துறையில் நான் முற்றுமுழுதாக மூழ்கிப் போனபோது, கண்டித்தும் கண்டிக்காமலும், அதைப் பொறுத்துக் கொண்டே என்னை இத்துறையில் நீடிக்க அனும தித்து, ஒத்துழைத்து, ஊக்குவித்த அம்மா - அப்பா, மூத்த சகோதரர்கள், சகோதரியை நினைத்துப் பார்க் கிறேன்.*

*பத்திரிகைத்துறை பற்றியும், செய்திகள், கட்டுரை கள் குறித்தும் பல கதைகள் பேசி, சிறுவயதிலேயே அத்துறைகள் குறித்து எனது ஆழ்மனதில் விருட் சங்களுக்கான நுண்ணிய விதைகளை நேரத்தோடே விதைத்துவிட்ட மைத்துனர் வரதசுந்தரத்தின் பங்களிப்பையும் விதந்துரைப்பேன்.*

*இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாற் றில் ஜாம்பவான் என மதிக்கப்படும் எஸ்.டி.சிவநாயகம் எனது தந்தையின் பால்ய காலத் தோழர். அவருடன் பல தசாப்த காலம் பக்கத்தில் இருந்தே பணியாற்றிய மிக மூத்த பத்திரிகையாளர் கே.கே. இரத்தினசிங்கம், சிறுவயதிலேயே என்னைத் தூக்கி வளர்த்தவர். இவர் கள் இருவரும் எங்கள் உறவுகள் மீது நீங்காப்பற்றுக் கொண்ட குடும்ப நண்பர்கள்.*

*யாழ். இந்துக் கல்லூரியில் பாடசாலைக் கல்வி யின் பின்னர் விளையாட்டு வீரனாகப் பந்தடித்துத் திரிந்த என்னை எனது தந்தையார் தம்மோடு கொழும் புக்குக் கூட்டிச்சென்று 'தினபதி', 'சிந்தாமணி' பத்தி ரிகை அலுவலகத்தில் பிரதம ஆசிரியர் எஸ்.டி.சிவநா யகத்திடம் ஒப்படைத்தபோது எனக்கு வயது பத் தொன்பதுதான். அங்கு, கே.கே. இரத்தினசிங்கம் துணை ஆசிரியர். இப்போது 'உதயன்' பிரதம ஆசி ரியராக விளங்கும் ம.வ.கானமயில்நாதன் செய்தி ஆசிரியர்.*

*இந்த முக்கூட்டுச் சிற்பிகளின் கைகளில் நல்ல கருங்கல்லாக நான் சிக்கிச் செதுக்கப்பட்டேன் என்பேன். ஒரு புறம் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகை நிறுவனத்துக்கே உரிய இறுக்கமான கட்டுப்பாடுகள், கெடுபிடிகள். மறுபுறம் பிரதம ஆசிரியருக்கும் துணை ஆசிரியருக்கும் ஏற்கனவேமிக நெருக்கமானவன், சிறு 'பையன்' என்ற கோதாவில் அரவணைப்பும் வாஞ்சையும் விசேட கவனிப்பும். அப்படி ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை பெரும் பேறு.*

*பத்திரிகைத்துறையின் பிரமாண்டத்தை தினபதி யில்தான் நான் முதன் முதலில் தரிசித்தேன். ஆரம்பத்தில் நீதிமன்றச் செய்தியாளன். ஆங்கிலமும் தெரியாமல், சிங்களமும் புரியாமல், கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றக் கட்டடங்களை சிதம்பர சக்கரமாய்ப் பார்த்து, மலைத்து, பத்திரிகைத்துறை யையே வெறுத்து, ஊருக்குத் திரும்பும் ஒரே முடிவுடன் மூடை முடிச்சுகளைக் கட்டிய எனக்குப் பத்திரிகைத்துறை வாழ்வில் மீண்டும் உயிர்மூச்சு வழங்கியவர் அச்சமயம் தின பதியின் உதவி ஆசிரியராக இருந்த செல்வரெட்ணம். இப்போது பிரான்ஸில் குடும்பத்துடன் அமைதியாக வாழ்ந்து வருபவர். ஊடகத்துறை - அதுவும் தமிழ் ஊடகத்துறை - கணினி மயத்துக்குள் புகுந்த சமயம், தமிழ் எழுத்துருவாக்கம், பக்கவடிவமைப்பு போன்றவற்றில் சிக ரத்தை எட்டும் புதிய தொழில்நுட்ப எத்த னங்களை பிரான்ஸில் இருந்தபடியே சத்தம் சந்தடியற்ற முறையில் உருவாக்கி வந்தவர். அன்று, மலைத்து நின்ற எனக்கு தைரியமும் தெம்பும் ஊட்டி, பத்தி ரிகைத்துறையில் நான் நின்று, நிலைத்து, நீடிக்க தகுந்த உரமூட்டியவர் அவர்தான்.*

**2 அங்கம்**

*சிறுபிள்ளைக்கு ஆனா, ஆவன்னா என்று சொல்லிக் கொடுப்பது போல என்னை ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றக் கட்ட டத் தொகுதிக்குக் கூட்டிச் சென்று இது ஆரம்ப நீதிமன்றம், இது நீதிவான் நீதி மன்றம், இது மாவட்ட நீதிமன்றம், இது மேல் நீதிமன்றம், இது மேன்முறையீட்டு நீதிமன்றம், இது உயர்நீதிமன்றம், இது தேர்தல் நீதி மன்ற அமர்வு, இது சம்பிரதாய நீதிமன்ற அமர்வு என்று நீதித்துறையின் அடிப்படைகளை - சூட்சமங் களை - நுணுக்கமாகப் போதித்தவர். ஓர் இளைஞனை வழிகாட்டி நெறிப்படுத்தும் மன எண்ணமும், பரிவும், தாராளமும், சிந்தனையும், இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பொறுமையும் செல்வரெட்ணம் அவர்க ளுக்கு அன்று இருந்திருக்காவிட்டால் நான் முதல் ஓரிரு மாதங்களுடனேயே பத்திரிகைத்துறையை விட்டு ஓடியிருப்பேன் என்பது திண்ணம்.*

*நான் பத்திரிகைத் துறைக்குள் நுழைந்த அன்றே - 'தினபதி பத்திரிகையின் செய்தியாளர் மேசையில் அமர்ந்த அன்றே - எனது "role model" ஆக பிரதம ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் (எஸ்.டி.எஸ்.) எனது மனதுக்குள் புகுந்து கொண்டார். அவருக்கு அடுத்த படியாக துணை ஆசிரியராக இருந்த கே.கே.இரத் தின சிங்கம் (கே.கே.ஆர்.) கண்டிப்பும், அரவணைப்பு மாக பத்திரிகைத் துறையின் அடிப்படைகள் பற்றிய வழிகாட்டல்களை வழங்கியவர். அதேசமயம் செய்தி ஆசிரியராக இருந்த ம.வ.கானமயில்நாதனுக்கு (எம்.வி.கே.) செய்தியாளர் மேசையில் இருந்த ஒரே செல்லப்பிள்ளை நான்தான். அவ்வளவு தூரம் வாஞ்சையுடன் வழிநடத்தியவர்.*

*ஊடகத்துறையின் அடிப்படைக் கோட்பாடுகள், விழுமியங்கள், நெறிமுறைகள் போன்றவற்றையும் ஊடகத் தமிழையும் இந்த முக்கூட்டுச் சிற்பிகள்தான் எனக்குப் போதித்தனர். அவர்கள் சொல்லித் தந்தவை ஏராளம் என்றால், அவர்களுக்குப் பக்கத்திலிருந்து நான் அவர்களிடம் பார்த்து, அறிந்து, தெரிந்து கற்றுக் கொண்டவை அதை விடவும் அதிகம்.*

*அடிப்படை ஆங்கில அறிவைக் கூட எட்டாத நிலை யில் தினபதி பணிமனைக்குள் புகுந்த நான், ஒரு வருடத்துக்குள்ளேயே பல்லாயிரம் திறமைசாலிகள் பரீட்சைக்குத் தோற்றி அதில் சுமார் நூற்றியம்பது பேரை மட்டும் தேர்ந்தெடுக்கும் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் ஆங்கிலத்திலும் விடை எழுதி முன்னிலையில் தெரிவானேன் என்றால் தினபதி பயிற்சிக் களத்தின் வாண்மையே அதற்கு முழுக் காரணம்.*

*எஸ்.டி.எஸ்ஸின் வழிகாட்டல், கே.கே.ஆரின் கண்டிப்பு, எம்.வி.கேயின் அரவணைப்பு என்ற முக் கூட்டு சக்திகளின் நெறிப்படுத்தலே பத்திரிகைத் துறையில் எனது பாதையைச் செப்பனிட்டன.*

*எனினும் அன்று கட்டவிழ்ந்த அரசியல் கள நிலைவரங்கள் - 1983 இல் தமிழர்களுக்கு எதிராகக் கொடூரமாக வெடித்த இனக்கலவரம் என்ற ஊழிக்கூத்து - சிங்களத் தலைமையில் அமைந்த அந்தப் பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்ற முடி யாத மன உளைச்சலை எனக்குத் தந்தன.*

(09 ஆம் பக்கம் பார்க்க...)



1951 இல் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படம். மூத்த தலைவர் வன்னியசிங்கத்துடன் அமர்ந்திருப்பவர் எஸ்.டி.சிவநாயகம். பின்னால் நிற்பவர்கள் செ.இராசதுரை, அமிர்தலிங்கம், மணவைத்தம்பி. எல்லோரும் இன்று அமரர்களாகி விட்டனர். (புகைப்பட உதவி: மணவை அசோகன்)

காலைக்கதிர் Kalaikkathir

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 6 | கணிதம் | அலகு 10

### தெரிதல்

⁎ **தெரிதல் தொடர்பான சிறிய விளக்கம்**

ஒரு தொகுதியில் குறித்த பண்புகளை வைத்து தொகுதிகளில் இருந்து பிரித்து எடுத்தல்.
பண்புகளாவான: -


1. வடிவம்
2. ஒற்றை எண்கள்
3. பருமன்
4. மற்றும் பல


உ+ம்: - (1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20) இவற்றுள் இரட்டை எண்களை, ஒற்றை எண்களை தெரிந்து எடுத்து எழுதுக?

1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19 — ஒற்றை எண்கள்

2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20 — இரட்டை எண்கள்

உ+ம் :-





சதுரம் முக்கோணி

**பின்வரும் தொகுதிகளிலிருந்து தரப்படும் பண்புகளுக்கு ஏற்ப தெரிவு செய்க**

1. ( a, b, c, S, G, W, n, A, T, D, C) எனும் தொகுதியில் இருந்து ஆங்கில பெரிய எழுத்துக்கள், ஆங்கில சிறிய எழுத்துக்கள் தெரிவு செய்க?

.....................................................................................................


2. (அம்மா, அப்பா, பாட்டி, தங்கை, தம்பி, தாத்தா, மாமா, சித்தி எனும் தொகுதியில் இருந்து ஆண்பால், பெண்பால் எனத் தெரிவு செய்க?


.....................................................................................................

3. (14, 18, 12.5, 6.48, 45, 76.4, 96, 1.25, 15.78, 6.27, 6.38) எனும் தொகுதியில் இருந்து எண்கள் தசம எண்கள் எனத் தெரிவு செய்க?

.....................................................................................................

4.





எனும் தொகுதியில் இருந்து பருமனில் பெரிய உருவங்கள், பருமனில் சிறிய உருவங்களை எனத் தெரிவு செய்க?

.....................................................................................................

5. (புகையிரதம், கப்பல், ஆகாயவிமானம், படகு, உலங்குவானூர்தி, கார், துவிச்சக்கரவண்டி) எனும் தொகுதியில் இருந்து தரையில் செல்பவை, ஆகாயத்தில் செல்பவை, நீரில் செல்பவை எனத் தெரிவு செய்க?

.....................................................................................................

ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் - திருமதி. சுதர்சினி விக்னமோகன்.
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# மட்டக்களப்பு விமான நிலையம் அதிக வசதிகளுடன் உருவாகும்

## சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உத்தரவாதம்



மட்டக்களப்பு விமான நிலையம் அதிக வசதிகளுடன் கூடிய கவர்ச்சிகர மான உள்நாட்டு விமான நிலையமாக உருவாக்கப்படவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1958 ஆம் ஆண்டில் சிவில் சர்வீஸ் துறையின் கீழ் கட்டப்பட்ட இந்த விமான நிலையம் பின்னர் இலங்கை விமானப் படைக்கு 1983 இல் ஒப்படைக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

கடந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போது (2012), விமான நிலையத்தின் ஓடுபாதை உருவாக்கப்பட்டு உள்நாட்டு விமான நிலையமாக இயக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்ட போதிலும், அது சர்வதேசத்திற்குரிய தரத்தில் உருவாக்கப்படவில்லை என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

உள்நாட்டு விமானங்களுக்காகக் கூட எந்த வளர்ச்சியும் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், உள்நாட்டு விமானங்களை இயக்குவதற்கு முன்னர் அடிப்படைத் தேவைகளின் பட்டியலைத் தொகுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## பாண் விலை அதிகரிப்பு தீர்மானம் எதுவுமில்லை

பாண் விலையினை அதிகரிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் தற்போது முன்னெடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தால் இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண மற்றும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் ஆகியோருக்கிடையில் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் நிறைவிலேயே அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்காத நிலையில், எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் பாண் விலையினை 10 ரூபாவால் அதிகரிக்க உள்ளதாக குறித்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையை 5 முதல் 10 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 325 பேர் கைது

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 325 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தமாக 46 ஆயிரத்து 260 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை கொழும்புக்கான 14 நுழைவாயில்களில் 3 ஆயிரத்து 337 வாகனங்களில் பயணித்த 6 ஆயிரத்து 549 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவற்றில் 75 வாகனங்களில் பயணித்த 170 பேர் மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகளை மீற முயற்சித்தமைக்காக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உமையாள்புரத்தில் அதிகரிக்கும் சட்டவிரோத மணல் அகழ்வுகள்



கிளிநொச்சி – கண்டாவளை, உமையாள்புரம் பிரதேசத்தில் அதிகளவில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உமையாள்புரம் பிரதேசம் ஆனையிறவு கடல் நீரேரிக்கு அருகில் உள்ள கிராமத்தின் பெரும்பாலான பகுதிகள் உவராகக் காணப்படுகின்றன. உவராகக் காணப்படும் பிரதேசத்தின் அளவு அதிகரித்து வரும் நிலையில், அந்தப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு இதனை விரைவுபடுத்தும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையின் கழிவு அகற்றும் பகுதியில் சட்டவிரோதமாக டிராக்டர்கள் மூலம் அகழப் படும் மணல் சேமிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து டிப்பர்களில் எடுத்துச் செல்லப்படுவதாகவும், தொடர்ச்சியாக இவ்வாறு இடம்பெற்று வருகின்றது எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக அடிக்கடி வாள்வெட்டுச் சம்பவங்களும், குழு மோதல்களும் இடம்பெறுகின்றன என்றும் கட்டுப்படுத்துமாறு பலதடவைகள் கோரிக்கை விடுத்த போதும் எவரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை எனவும் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, உமையாள்புரம் கிராமத்தின் எதிர்காலம் கருதி அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முழுக்கிராமமும் இன்னும் ஒரு சில வருடங்களில் உவர் நிலமாக மாறிவிடும் என்றும் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 9** | **கணிதம்** | **அலகு 13**

## மட்டந்தட்டலும் விஞ்ஞான முறைக் குறிப்பீடும் - விடைகள்

### விஞ்ஞான முறைக்குறிப்பீடு -

**பயிற்சி**

01. $6.05 \times 10^4$
02. $3.145 \times 10^8$
03. $7.43 \times 10^4$
04. $5.29 \times 10^3$
05. $2.0 \times 10^2$
06. $4.34 \times 10^6$
07. $5.812 \times 10^5$
08. $1.01 \times 10^3$
09. $2.54 \times 10^2$
10. $1.3 \times 10^{10}$
11. $1.84 \times 10^1$
12. $7.34 \times 10^0$
13. $7.158 \times 10^2$
14. $6.18 \times 10^1$
15. $7.65 \times 10^0$

### 0 இற்கும் 1 இற்கும் இடைப்பட்ட எண்களை விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் எழுதுதல்

**பயிற்சி**

01. $8.67 \times 10^{-1}$
02. $6.18 \times 10^{-4}$
03. $2.1 \times 10^{-3}$
04. $7 \times \frac{1}{1000000}$
05. $9.6 \times \frac{1}{10000}$, $9.6 \times 10^{-4}$
06. $4.1 \times \frac{1}{100}$, $4.1 \times 10^{-2}$
07. $4.9 \times \frac{1}{1000}$, $4.9 \times 10^{-3}$
08. $1.35 \times \frac{1}{10000}$, $1.35 \times 10^{-4}$
09. $5 \times \frac{1}{1000000}$, $5 \times 10^{-6}$
10. $1.11345 \times \frac{1}{10}$, $1.11345 \times 10^{-1}$

### விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் உள்ள எண்களைச் சாதாரண வடிவில் எழுதுதல்

01. 43000
02. 7850
03. 185.4
04. 26100000
05. 9008
06. 0.014
07. 0.00385
08. 0.2065
09. 0.00067
10. 0.0000425

### எண்களை மட்டந்தட்டல்
### கிட்டிய 10,100,1000 இற்கு மட்டந்தட்டல்

| எண்கள் | கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டுக | கிட்டிய 100 இற்கு மட்டந்தட்டுக | கிட்டிய 1000 இற்கு மட்டந்தட்டுக |
|---|---|---|---|
| 18196 | 18200 | 18200 | 18000 |
| 1785 | 1790 | 1800 | 2000 |
| 106810 | 106810 | 106800 | 107000 |
| 39672 | 39670 | 39700 | 40000 |
| 18078 | 18080 | 18100 | 18000 |
| 30769 | 30770 | 30800 | 31000 |

2)
1. 9550
2. 9599

### தசம எண்களை மட்டந்தட்டல்

**பயிற்சி**

01)
01. 16.9
02. 137.6
03. 748.7
04. 111.0
05. 6.7

02)

| எண்கள் | 1ஆம் தசமதானம் | 2ஆம் தசமதானம் | கிட்டிய முழுவெண் |
|---|---|---|---|
| 9.874 | 9.9 | 9.87 | 10 |
| 10.169 | 10.2 | 10.17 | 10 |
| 315.765 | 315.8 | 315.77 | 316 |
| 70.916 | 70.9 | 70.92 | 71 |
| 1.894 | 1.9 | 1.89 | 2 |
| 32.123 | 32.1 | 32.12 | 32 |
| 123.436 | 123.4 | 123.44 | 123 |
| 21.604 | 21.6 | 21.60 | 22 |
| 13.821 | 13.8 | 13.82 | 14 |

ஆக்கம் :- தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/ செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/ தேசிய கல்வியியற் கல்லூரி

# 2 ஆயிரம் ஓட்டோக்கள் பொலிஸுக்கு வழங்கல்





பொலிஸார் தமது கடமைகளை மிகவும் திறமையாக நிறைவேற்ற, நாட்டின் அனைத்து காவல் நிலையங்களுக்கும் 2 ஆயிரம் புதிய ஓட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன என பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றத்தடுப்பு மற்றும் விசாரணையை மேம்படுத்துவதன் மூலம் சமூக காவல்துறையின் செயற்பாட்டை வலுப்படுத்தவும் ஊக்குவிக்கவும் இந்த ஓட்டோக்கள் வழங்கப்பட்டன என அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஓட்டோக்கள் பல்வேறு முறைப்பாடுகளை விசாரிப்பதற்கும், 119 அவசர அழைப்புகளுக்காக அனுப்பப்படுவதற்கும், குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகத்தில் கடமைகள் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் வைத்து 10 காவல் நிலையங்களுக்கு ஓட்டோக்கள் முதல் கட்டமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

# தமிழ் ஊடகத்துறையின்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*ஆசிரியர் சிவநாயகத்திடமும், துணை ஆசிரியர் இரத்தினசிங்கத்திடமும் கூறிவிட்டு பத்திரிகைத்துறை பற்றிய சுமார் நான்கு வருடப் பட்டறிவுடன் வெளியேறினேன். தலைநகர் கொழும்புக்கும், சட்டக்கல்லூரியில் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி, இன்னும் ஒரு வருடமே மிச்சமிருக்கும் சட்டத்தரணிக் கல்விக்கும் பரீட்சைக்கும் ஒரேயடியாக விடை கொடுத்துத் தலை முழுகினேன்.*

*அடுத்தது என்னவென்று தெரியாமல் – அப்போது முகிழ்ந்திருந்த ஈழத் தமிழர்களின் உரிமைக்கான ஆயுதம் தாங்கிய விடுதலைப் போரின் மீது பற்றும் பாசமும் இருந்த போதிலும் அதை வரிக்கத் தெம்பும் தைரியமும் மனப்பக்குவமும் இல்லாமல் அல்லாடிக்கொண்டு – பிறந்த பூமியான திருகோணமலையிலும், வளர்ந்த மண்ணான யாழ்ப்பாணத்திலுமாக சில மாதங்களை உருட்டினேன்.*

*பேனா தூக்கிப் போராட வேண்டிய நாம், ஆயுதம் தூக்கச் செல்வதா என்று மனப்போராட்டம் நடந்துகொண்டிருந்த சமயத்தில்தான் நான் வளர்ந்த – அல்லது நானும் சேர்த்து வளர்த்த ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம், ஈ.சரவணபவன் என்ற இளம் தொழில் முயற்சியாளருடனான அறிமுகத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தது.*

*அடுத்த இருபத்தியைந்து ஆண்டுகள் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறைத் தளத்திலே ஆழமான தடங்களை நான் பதித்துச் செல்வதற்கான வலுவான செல்வாக்கை – மிக உறுதியான வாய்ப்பை – அந்தச் சந்திப்பும் அதைத் தொடர்ந்து உருவான உறவுப்பிணைப்பும் எனக்குத் தந்தன.*

*'உதயன்', 'சஞ்சீவி', 'சுடர்ஒளி' என்ற பத்திரிகைத் தரு பெருவிருட்சமாக உருவெடுப்பதற்கான ஆரம்ப விதைப்பில் தொடங்கி, அடுத்த இருபத்தியைந்து ஆண்டுகள் அதைப் பண்படுத்தி வளர்த்தெடுப்பதில் பிரதான பங்களிப்பும் இதன் மூலம் எனக்கு முழு அளவில் கிட்டின.*

– இது எனது நூலில் என் ஆரம்பக் குறிப்பின் ஒரு பகுதி.

இனி, சிவநாயகம் ஐயாவுடனான என் அனுபவப் பகிர்வைப் பார்ப்போம்.

(வளரும்)




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 39 ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**381.பாரதியாரின் இயற்பெயர் யார்?**

**382.'வாழ்க்கை என்பது போராட்டம் அதில் வலிமையானவையே வாழும்' என்றவர் யார்?**

**383.முதலாவது சர்வதேச ஒரு நாள் உலகக் கிண்ணத் தொடரை கைப்பற்றிய அணி எது?**

**384.நான்கு தீக்குச்சிகளை வைத்து உருவாக்கக் அதி கூடிய மிகப் பெரிய எண் யாது?**

**385.இலங்கையில் அனைத்து மதத்தவரும் வழிபடும் மலை எது?**

**386.தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்ட தொடரின் பெயர் யாது?**

**387.இலங்கையில் அரச சேவையில் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை யாது?**

**388.2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைக்கான பொதுநலவாய விருதை பெற்றவர் யார்?**

**389.இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதவி பொருளாளர் யார்?**

**390. எல்லாளனை தோற்கடித்த மன்னன் யார்?**

பெயர் :- ................................................ அடையாள அட்டை:- ...............................
முகவரி :- ................................................ மின்னஞ்சல் முகவரி:- ...............................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 37 ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**361.புத்தளம்**
**362.1760 km**
**363.பொரவக்க**
**364.அலெய்னா டெப்லிட்ஸ்**
**365.எகிப்து**
**366.ரஷ்யா**
**367.அறிவுபூர்வமாக**
**368.02 தடவை**
**369.எவரெஸ்ட் சிகரம்**
**370.ஹிவாங்கோ நதி/ மஞ்சள் நதி**

## 01 ஆம் திகதி வெளியான 37 ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1.ஜெ.வினோயன் - குடத்தனை (6சரி)
2.கே.ஸ்ரீதரன் - கொழும்பு (8 சரி)
3.எம்.வர்ணபாலன் - யாழ்ப்பாணம் (8 சரி)
4.எஸ்.சதுர்ஜினி - அல்வாய் (8 சரி)
5.கே.அனுஷன் - ஏழாலை (9சரி)
6.பி.தனுயா - நேரியகுளம் - (7 சரி)
7.ஜே.சராதரன் - குப்பிளான் - (7சரி)
8.ஆர்.மாலதி - உடுப்பிட்டி (8 சரி)
9.ஏ.துஷான் - நீர்வேலி - (9சரி)
10.ரிஷ்மிகா அஹமட் - தெல்தோட்டை (8 சரி)
11.எஸ்.ஸ்ரீஇராமச்சந்திரன் - பத்திராயன் (7 சரி)

# காரைதீவில் ஓட்டோ விபத்து



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் சாரதி காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை காலை சம்பவித்துள்ளது.



சாய்ந்தமருதைச் சேர்ந்த ஓட்டோ காரைதீவு பிரதான வீதியால் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்டவாகனக்கோளாறு காரணமாக திடீரென பாதையை விட்டுவிலகி வயலுக்குள் பாய்ந்தது.

ஓட்டோ சேதமடைந்த போதிலும் சாரதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படவில்லை.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு சம்மாந்துறைப் பொலிஸார் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

# அவமானத்துக்கு உள்ளாகியுள்ளது இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு

## அர்ஜுன ரணதுங்க வேதனை



கொழும்பு, ஜுலை 03

இலங்கையில் தற்போது கிரிக்கெட் விளையாட்டு மிகவும் அவமானத்திற்கு உள்ளாகி உள்ளதாக முன்னாள் இலங்கை அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் தோற்பது குறித்தும், வீரர்களின் ஒழுக்கம் குறித்தும் தற்போது பேசப்பட்டு வருவதாகவும் தான் அணித் தலைவராக இருந்தபோது நாட்டுக்காக விளையாடிய வீரர்கள் மட்டுமே அணியில் இருந்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஓர் அணி இருந்ததால் தங்களுக்கு உலகக் கிண்ணத்தை வெல்ல முடியுமானதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய வீரர்களின் ஒழுக்கம் சீர்குலைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பஸ்ஸில் பயணித்த யுவதி துஷ்பிரயோகம் ஹொரவபத்தானவில் இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜுலை 03

ஹொரவபத்தான பிரதேசத்தில் தனியார் பஸ்ஸில் பயணித்த 19 வயதுடைய யுவதியை துஷ்பிரயோகம் செய்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

பஸ்ஸில் வேறு பயணிகள் இல்லாத சந்தர்ப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சாரதி மற்றும் நடத்துநர், குறித்த யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



இந்த வாரம் இவர்

# உலகிலேயே அதிக அறிவுத்திறன் கொண்ட சிறுமி

## விசாலினி



உலகிலேயே அதிக அறிவுத்திறன் கொண்ட சிறுமியாக திகழ்பவர் இந்தியா திருநெல்வேலியைச் சேர்ந்த சிறுமி விசாலினி உளஅளவில் மிக உயர்ந்த அறிவுத்திறன் கொண்டவளாக விளங்கும் இந்த சிறுமி எதிர்காலத்தில் பெரிய IT கம்பனி ஒன்றை உருவாக்குவதே தனது இலக்கு என்று சொல்கிறார் – உலகத்தில் எல்லோருக்கும் போல் அல்லாது தனக்கு கிடைத்திருக்கும் தாய் ,தந்தையர் தனக்கு மிகப்பெரும் வரம் என்றும் பலம் என்றும் விசாலினி பெருமைப்படுகிறார் .

தான் பிறந்த நாட்டுக்கு பெருமை பெறச்செய்யும் அத்தனை விடயங்களையும் தனது துறையில் திறம்பட செய்வேன் என விசாலினி திடசங்கற்பம் கொண்டு செயற்படுகிறார்.

சிறுமியான இவர் தனக்குரிய இணையத்தளத்தைத் 24 மணி நேரத்தில் தானே வடிவமைத்து பெரும் சாதனையை படைத்திருக்கிறார் இந்த சாதனையை இதுவரை யாரும் செய்ததில்லை உலகளவில் இவ்வளவு விரைவாக யாரும் இணையத்தளத்தை வடிவமைத்தது இல்லை என்றே அனைவரும் புகழ்ந்துள்ளார்கள்.



அதுமட்டும் இல்லாமல் தான் இணையத்துறையில் இப்போதும் கற்றுக்கொண்டு இருப்பதோடு மட்டும் நிறுத்தாமல் தன போன்ற குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இந்த துறையில் வல்லுனராக இருப்பவர்களையும் விசாலினி இந்தச் சிறுவயதிலேயே வழிப்படுத்திக் கொண்டு இருக்கிறார் .

தன்னுடைய 11வயதில், 25 இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு அழைக்கப்பட்டு அங்கு கல்வி பயிலும் இறுதியாண்டு மாணவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், முதல்வர்களுக்கு கருத்தரங்க பயிற்சி வகுப்புகளை நடத்தியவர், டிஜிட்டல் இந்தியாவுக்கே ஆதாரமாக இவர்தான் இருப்பார் என தமிழக மக்கள் பேசும் அளவுக்கு அறிவுத்திறன் கொண்டவராக இருக்கிறார்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி வியந்து பாராட்டும் ஒருவராக சிறுவயதில் திகழும் இந்த சிறுமி மோடியின் டிஜிட்டல் இந்தியா திட்டத்தில் பெரும் பங்காற்றுகின்றார் – அண்மையில் நடந்த உலக ஆசிரியர் தின நிகழ்வில் மோடியிடம் கேள்விகேட்ட சிறுமி இந்திய வளர்ச்சிக்கு என்ன சேவை செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள் என கேட்டுள்ளார் – அதற்கு பதிலளித்த மோடி மின்சாரம், உணவு இவற்றை விரயம் செய்யாமல் இருக்க கற்றுக் கொடுக்க வேண்டும் அதுவே மிகப்பெரும் சேவை தான் என்று பதிலளித்துள்ளார் .

இவரது திறமையை அறிந்த இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நிர்வாகம், சர்வதேச தலைமையகத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்த போது விசாலினிக்கு 12 வயது, அங்கு உலக அளவிலான IOB GM தலைமையிலான IT திறமையாளர்களுக்கு அரை மணி நேரம் வகுப்பு எடுக்கச் சொன்னார்கள். ஆனால் விசாலினியோ 2 மணி நேரம் பாடம் நடத்தி அனைவரையும் பிரமிக்க வைத்தார். தன் சொந்த முயற்சியால் மட்டுமே, உலகின் பல்வேறு நாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர் விசாலினி என்ற இந்த தமிழ்க் குழந்தை.

HCL நிறுவனம் The Pride of India -Visalini என பாராட்டிய போது அவருக்கு 11 வயது.

TEDx சர்வதேச மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய விசாலினி 11 வயதில், The Youngest TEDx Speaker என்ற பட்டமும் பெற்றார்.

London, World Records University, Dean தாமஸ் பெய்னிடம் பாராட்டுப் பெற்றார் விசாலினி.

Times Now English News நிறுவனமோ ஒருபடி மேலாக விசாலினியின் வீட்டிற்கே வந்து 2 நாள்கள் தங்கி அவரைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, The Amazing Indian ‡ Visalini என அரை மணி நேர Documentry படத்தை ஒளிபரப்பியது.

நியூ சவுத் வேல்ஸை தலைமையிடமாகக் கொண்டு, காமன் வெல்த் ஆப் ஆஸ்திரேலியாவால் தொடங்கப்பட்ட ஆஸ்திரேலியாவின் முன்னணிச் செய்தி நிறுவனமான SBS ஆஸ்திரேலியா.

> சாதாரண மனிதர்களின் அறிவுத்திறன் 90 முதல் 110 வரை இருக்கும். கணினி ஜாம்பவான் பில்கேட்ஸுக்கு IQ level 160. ஆனால் விசாலினியின் IQ level 225.

உலகின் 74 மொழிகளில் 174 நாடுகளில் விசாலினியின் அரைமணி நேர பேட்டியை ஒலிபரப்பி கௌரவப்படுத்திய போது விசாலினிக்கு வயது 13 தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் விசாலினியின் தந்தைக்கு வந்தது ஒரு தொலைபேசி அழைப்பு எமது நாட்டு கௌரவப் பிரதமர் உங்களது மகளை சந்திக்க விரும்புகிறார் என்று.

பிரதமரைக் கண்ட விசாலினி, எழுந்து நின்று தமிழில் வணக்கம் என்று சொல்ல, பதிலுக்கு தமிழிலேயே வணக்கம்.என்றார் பிரதமர் மோடி.

விசாலினியுடன் உரையாடிய போது, இந்தச் சிறுவயதில் நீ செய்துள்ள சாதனைகளே, இந்திய நாட்டிற்கான சேவைதான் என்று நெகிழ்ந்து பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் கருணாகரனோ, விசாலினி இந்தியத் தகவல் தொழில்நுட்பத்துறையில் முக்கியப் பங்காற்றுவார் என்று பெருமை பொங்க வாழ்த்தினார்.

உலக அளவில் பாராட்டு பெற்றுள்ள விசாலினிக்கு, தான் இன்னும் தமிழக முதல்வரின் பாராட்டைப் பெறவில்லையே என்பது மிகப்பெரிய ஆதங்கம்.

சாதாரண மனிதர்களின் அறிவுத்திறன் 90 முதல் 110 வரை இருக்கும். கணினி ஜாம்பவான் பில்கேட்ஸுக்கு IQ level 160. ஆனால் விசாலினியின் IQ level 225.

உலகிலேயே மிக அதிக அறிவுத்திறன் கொண்டவர் என்ற உலக சாதனை படைத்த விசாலினி, இந்தியாவின் தமிழ்நாட்டின் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

உலகிலேயே இல்லை இப்படி ஒரு குழந்தை என்று சாதித்துக் கொண்டிருக்கும் விசாலினியின் தந்தை ஓர் தொழில்நுட்பவியலாளர் தாத்தாஒட்டு வேலை செய்பவராக (வெல்டர்) இருந்து, பின் தமிழாசிரியராக ஆனவர்.

இன்றும் உலகின் அதிக அறிவுத்திறன் கொண்டவர் என்ற தன நிலையை அதிகமாக உயர்த்திக் கொண்டு செல்லும் இந்த சிறுமி எதிர்காலத்தில் உலகளவில் மிகப்பெரும் சாதனைகளை



செய்வார் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர் – தமிழர்களுக்கு கிடைத்த மிகப்பெரும் தொழில்நுட்ப வளமும் பெருமையும் விசாலினிதான் .

காலைக்கதிர் Kalaikkathir



# ஒன்று சேரந்து சிறப்பாக மீளக்கட்டியெழுப்புவோம்

## இது, இன்று உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் 99 ஆவது சர்வதேச கூட்டுறவு நாளின் கருப்பொருள்

த.ரமேஸ்குமார்
(பதில் செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை)

சர்வதேச ரீதியில் கூட்டுறவு அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு நிறுவனமாக விளங்கும் சர்வதேச கூட்டுறவு அமையம் (International Cooperative Alliance - ICA) 2021 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு தினக் கருப்பொருளாக Rebuild Better Together என்பதை பிரகடனம் செய்துள்ளது. இதன் தமிழ் வடிவமாக 'ஒன்று சேர்ந்து சிறப்பாக மீளக்கட்டியெழுப்புவோம்' என்பதாகும்

ஆம். உண்மைதான். காலத்திற்கேற்ற எண்ணக் கருவேதான். இன்று அகில உலகத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொவிட் – 19 கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக உலகில் உள்ள நாடுகள் அனைத்திலுமே இயல்பு நிலை காணப்படவில்லை. மாறாக அச்சம் கொண்ட அசாதாரண சூழ்நிலையே காணப்படுகின்றது. இத்தகைய அசாதாரண சூழ்நிலையிலிருந்து சாதாரண இயல்பு நிலைமை வாழ்க்கைக்கு மாற்றியமைத்து, அதன் வழியே பயணித்து, நல்லதொரு வளமான இயற்கையுடன் கூடிய இனிமையான சூழலை உருவாக்க வேண்டிய தேவை அனைவரிடத்திலுமே காலத்தின் கோலத்தால் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை செவ்வனே சீராக நிறைவேற்ற வேண்டி அனைவரும் உறுதியெடுப்போம்.

அந்த வகையில், மக்கள் இயக்கமான கூட்டுறவும் அதன் கொள்கைகள், சிந்தனைகளுக்கு அமைய மக்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை உள்ளது. மக்களால் உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, செயற்படுத்தப்படுகின்ற அமைப்பே கூட்டுறவாகும். கூட்டுறவு அமைப்புக்கள் முழுமையான பொருளாதார சமூக கலாச்சார நிறுவனங்களாக விளங்குகின்றன. கூட்டுறவில் இணையும் அனைவரும் அதன் அங்கத்தவர்களாக கருதப்படுகின்றனர். அங்கத்தவர்களின் பிரச்சினைகள் யாவற்றையும் முற்றாகக் களைந்து, அவர்களின் பொருளாதார, சமூக, கலாச்சார அம்சங்களை மேம்படுத்துவதே இவ் அமைப்புக்களின் அடிப்படை நோக்கமாகும்.

மனித மேம்பாட்டுக்கு அச்சுறுத்தல்களாக விளங்குகின்ற முதலாளித்துவப் போட்டி, சுரண்டல், சமூக ஏறத்தாழ்வுகள், இலாப நோக்கம் போன்ற சமூக விரோத சக்திகளை கூட்டுறவு அமைப்புக்கள் முழுமையாக இல்லாதொழிக்க தொடர்ச்சியாக உழைத்து வருகின்றன. இதனால் இவை முற்றிலும் மக்கள் அமைப்புக்களாக – ஜனநாயக நிறுவனங்களாக – காணப்படுகின்றன.

மனித நாகரிகத்தின் அடிப்படையே கூட்டுறவு ஆகும். ஆதிகாலங்களில் காடுகளிலும் மலையடிவாரங்களிலும் நதிக்கரையோரங்களிலும் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்த மனிதன் இருக்க ஒழுங்கான இடம் ஒன்றைத் தேடி, தான் பாதுகாப்பாக வாழ ஏனைய ஜீவராசிகளையும் ஒன்றிணைத்து செயற்பட்டு தன்னையும் தன் சார்ந்த சமூகத்தையும் பாதுகாத்து, தனது செயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்கினான். இத்தகைய கருமம் கூட்டுறவுச் சிந்தனையின் மூலமே சாத்தியப்பட



லாயிற்று. வெற்றியடையலாயிற்று.

காலப்போக்கில் ஒன்று சேர்ந்து கூட்டுறவுப் பண்புகளுடன் வாழ்ந்து வந்த மனிதன் சிந்திக்க ஆரம்பித்தான். மனிதனின் இந்த சிந்தனையின் வளர்ச்சியே மனித சமுதாயத்தை தற்போது இத்தகையதொரு நெருக்கடியான சூழ்நிலைக்குள் கொண்டுவந்து விட்டிருக்கின்றது. அண்டமெல்லாம் பரவியிருக்கும் பூமாதேவியின் மேற்பரப்பிலே மனிதனானவன் மனிதத்துவத்துடன் வாழ்ந்து களிக்கவே இயற்கை அன்னை அள்ளி அணைத்து தனது அரவணைப்பின் பயனாக பருவ காலங்கள் உருவாகி, அவை வானிலை, காலநிலை என உருமாறி, அவற்றுக்கிசைந்தால் போல் மனிதன் வாழப் பழகிக்கொண்டான். இவ்வாறு வாழ்ந்து வந்த மனிதன் பூமியிலிருந்து சற்று விலகி வேறு ஒரு கிரகத்திற்கு செவ்வாய் கிரகத்திற்கு வசிப்பதற்கு பயணமானான். இயற்கை அன்னை விடுவாளா என்ன??

மனிதா! நீ முதல் பூமியிலே ஒழுங்காக வாழ்ந்து உன் வரலாற்றைச் சிறப்பாக முழுமையாக பதிவு செய். அதன் பின்னர் வேற்றுக் கிரகத்தில் வசிப்பதற்கு தயார்ப்படுத்து என்று கூறுவதைப் போன்று தன்னுடைய இயற்கைச் சமநிலையை பேணுவதற்கான செயற்பாடுகளில் இறங்கினான். அதன் விளைவே இன்றைய நெருக்கடி.

ஆம். உலக மக்கள் அனைவரையும் கூட்டுறவு அமைப்புக்களில் இணைத்து, அதன் அங்கத்தவர்களாக ஆக்கி, அமைதியும் பொருளாதார வளமும் மிக்க சமாதானமும் நிறைந்த உரு உலகக் கூட்டுறவுச் சமுதாயமாக உருவாக்குவதே கூட்டுறவின் புனிதமான நோக்கமாகும். இத்தகையதொரு நோக்கம் வேறு எவ் அமைப்புக்களிலும் இல்லாத தனித்துவம் வாய்ந்த சிறப்புத் தன்மை கொண்ட அம்சமாகும். முதலாளித்துவத்தை ஒழித்து, எல்லோரும் சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் சகோதரத்துவத்துடனும் இணைந்து, அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, அதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை உயர்த்தி, பிரதேச, பிராந்திய, தேசிய பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதற்கு அனைவரும் ஒன்றுசேர்ந்து சிறப்பாக செயற்படுவோம்.

ஆம். இந்த ஆண்டின் 99 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தின் கருப்பொருளும் அவ்வாறானது தான். 'ஒன்று சேர்ந்து சிறப்பாக மீளக் கட்டியெழுப்புவோம்'. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு போன்ற கூட்டுறவுச் சிந்தனைகளுக்கு அமைய அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிப்போம்.

தற்போது உலகினை உலுக்கிக் கொண்டிருக்கும் கொவிட் – 19 கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சர்வதேச அரங்கில் பொருளாதாரத்தில் தளம்பல் நிலை ஏற்பட்டு அது சகல நாடுகளிலும் அது தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய காலகட்டத்தில் கூட்டுறவு என்ற உறவுமுறை தொடக்கம் அதன் அமைப்பு, கட்டமைப்பு ரீதியிலான உலகளாவிய தன்மையின் தனித்துவம் உணரப்பட்டிருக்கின்றது. இந்தக் கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தினால் அழிந்து போயுள்ள, வளர்ச்சியற்ற பொருளாதாரக் கட்டமைப்புக்களை மீளவும் புத்தெழுச்சியுடன் புதிய பரிமாணத்தில் கட்டியெழுப்ப வேண்டிய தேவை அனைத்துத் தரப்பினரிடத்திலும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

இதனை வலியுறுத்தும் வகையிலேயே 2021 ஆம் ஆண்டின் சர்வதேச கூட்டுறவு தின கருப்பொருளாக ஒன்றுசேர்ந்து சிறப்பாக மீளக் கட்டியெழுப்புவோம் என Rebuild Better Together என சர்வதேச கூட்டுறவு நிறுவனம் பிரகடனம் செய்துள்ளது.

உலகிலிருந்தும் எமது ஆசியாக் கண்டத்திலிருந்தும் தென்னாசியாவின் ஆச்சரியமாக விளங்கும்



இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் எமது தாய்நாடான இலங்கையிலிருந்தும் கொடிய வைரஸ் கொரோனாவை விரட்டியடித்து, அதன் தாக்கத்தில் இருந்து மீண்டு, நாட்டு மக்கள் அனைவரும் கூட்டுறவு என்ற கொடியின் கீழ் ஒன்று சேர்ந்து எமது நாட்டையும் எமது பொருளாதாரத்தையும் மீளவும் கட்டியெழுப்புவோமாக!

காலைக்கதிர் Kalaikkathir

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** என்ன? விசயமொன்றும் இல்லாமல் திடீரென ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறாரே?

**பதில்:-** விசயமில்லை என்று யார் சொன்னது? ஆட்சிப் படகிற்குள், பயணக் கட்டுப்பாட்டு எதிர்ப்பு, உரமின்மை எதிர்ப்பு, கடல்மாசு எதிர்ப்பு, சீன எதிர்ப்பு, எரிபொருள் விலையேற்ற எதிர்ப்பு, உட்கட்சிப்பூசல் என பலபக்கங்களிலும் ஓட்டைகள் விழத் தொடங்கிவிட்டன. அவற்றை அடைப்பதற்கு அவரது குடும்பக் கரங்களும் இராணுவக் கரங்களும் போதாது



என்று தெரிவதால், மீண்டும் மக்கள் கரங்களின் துணை தேட வேண்டிய அவசியம் வந்துவிட்டது. அதுதான் ஜனாதிபதியின் திடீர் உரையின் காரணம் என்று நினைக்கிறேன். இம்முறையும் மக்கள் ஏமாறுவார்கள் என்று தோன்றவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ சோழியன் குடுமி சும்மா ஆடாதுங்கோ...!**

**2. கேள்வி:-** கடவுளின் மேலேயே கோபம் வருகிறது. ஒரு சின்னக் கிருமி இத்தனை லட்சம் பேரைக் கொல்வதைப் பார்த்துக் கொண்டு அவர் பேசாமல் இருப்பது எப்படி நியாயமாகும்?

**பதில்:-** உங்கள் கேள்விக்குப் பிறகு வருகிறேன். அண்மையில் ஒரு செய்தி படித்தேன். சுவீடனில் இயங்கும் அமைதிக்கான sleri என்ற அமைப்பு ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அவ்வறிக்கையின்படி இன்று உலகில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அணுகுண்டுகள் எந்த நிமிடமும் வெடிக்கத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம். இதைத் தவிர 3,825 அணு ஏவுகணைகளும் எப்போதும் கண்டம் விட்டுக் கண்டம் பாயத் தயார் நிலையில் இருக்கின்றனவாம். சென்ற ஆண்டைவிட இவ் ஏவுகணைகளின் தொகை 105 ஆல் அதிகரித்திருக்கிறதாம். சோவியத், அமெரிக்க பனிப்போரின் போது உருவாக்கப்பட்ட இவ் அணுகுண்டுப் போர் முறை இப்பொழுது பன்மடங்காய் அதிகரித்து உலகத்தை ஆபத்தின் விளிம்புக்குக் கொண்டு வந்திருப்பதாய் அவ் அறிக்கை கூறுகிறது. இவ் அறிக்கையை வெளியிட்ட அவ் அமைப்பின் அதிகாரி ஒருவர், இன்றைய நிலையில் அணு யுத்தம் ஒன்று தொடங்கினால், இந்தப் பூமி இருக்குமா என்பது சந்தேகம்தான் என்று கூறியுள்ளார்.

சரி, இனி உங்கள் கேள்விக்கு வருவோம். மனிதனே மனிதனை அழிக்க இத்தனை அநியாயங்களைச் செய்து பாடுபட்டுக் கொண்டிருக்கிற பொழுது, அவனை அடக்க இயற்கையை ஏவுவதைத் தவிர கடவுளுக்கு வேறு என்ன வழிதான் இருக்கிறது? நீங்களே சொல்லுங்களேன்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ கொரோனா பயப்பிடுத்திறது போதாதெண்டு இவர் வேற பயப்பிடுத்திறார்.**

**3. கேள்வி:-** நாட்டுமக்களுக்கான ஜனாதிபதியின் உரையில் தமிழ் மக்கள் பிரச்சினை பற்றி ஒன்றும் பேசவில்லையே?

**பதில்:-** தமிழ் மக்களால் வந்த உலகப் பிரச்சினை இரண்டாம் பட்சமாகி, சிங்கள மக்களால் கிளம்பியிருக்கும் உள்ளூர்ப் பிரச்சினை முதலிடத்தைப் பிடித்துவிட்டது. அதனால்த்தான் அதற்கு முக்கியம் தரும் அவசரத்தில் இதனை மறந்திருப்பார் போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ எல்லாம் இருகோட்டுத் தத்துவம்தான்!**

**4. கேள்வி:-** 'பொசனை' முன்னிட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் பட்டியலில் இவ்வளவு நாளும் இல்லாமல் தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்களும் இணைக்கப்பட்டுள்ளதே! திருந்தத் தொடங்கிவிட்டார்களா?

**பதில்:-** 'கங்கைக்குள் காகம் கவிண்டு கவிண்டு மூழ்கினாலும் அன்னமாகாது' என்று சும்மாவா சொன்னார்கள். இந்தக் கருணை எல்லாம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.ரி. பிளஸ் வரிச்சலுகை அழுத்தத்தால் விளைந்ததுதானே தவிர வேறொன்றும் இல்லை என்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'ஒநாயின் அழுகை!'**

**5. கேள்வி:-** நாடாளுமன்றத்தில் நாமல் அவர்கள், தமிழ் அரசியல் சிறைக் கைதிகள் பல ஆண்டுகளாய்ச் சிறைக்குள் வாடுகின்றனர் எனவும், அநியாயமாகச் சிறைக்குள் அகப்பட்டிருக்கும் துன்பத்தை நல்லாட்சிக் காலத்தில் நானும் அறிந்து கொண்டேன் எனவும் பேசி, அவர்களை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரிக்கை வைத்தமையைக் கேட்டீர்களா?



**பதில்:-** கேட்டுச் சிலிர்த்தேன். பேரினத்தின் புதிய தலைமுறைத் தலைமைகள் உண்மையாய் இங்ஙனம் மன மாற்றம் கொண்டால் நாடு விரைவில் உருப்படட்டுவிடும். சிலகாலத்திற்கு முன்பு 'சிறைக்குள் தமிழ் அரசியல் கைதிகளே இல்லை' என்று சொன்ன பெரிய மனுசன் தன் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. நல்லாட்சிக் காலத்தில் சிறைக்குள் குற்றம் செய்யாமல் தான் வாடியது பற்றி நாமல் பேசியதும், முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா எழுந்து, நாமலின் கருத்தை வழிமொழிவதாய்ச் சொல்லி, முன்பு இவர்கள் தன்னை அநியாயமாய் உள்ளே வைத்த கதையைச் சொன்னதுதான் அன்றைய நிகழ்வின் உச்சம்!



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ அப்பாவின் அடிக்கு மகன் போட்ட மருந்து.**

**6. கேள்வி:-** தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்த அடைக்கலநாதன் அவர்கள் எடுத்த முயற்சி பிசுபிசுத்துப் போய்விட்டதே?

**பதில்:-** கூட்டமைப்புக்குள் தங்களுக்கான மதிப்பு நாளுக்குநாள் குறைந்து வருவதைக் கண்டு, ஏதும் செய்யமுடியாமல் மனம் வருந்தி, அதற்கான மாற்று மருந்தைக் கண்டுபிடித்தார் அடைக்கலநாதன். அம்மருந்துதான் கட்சிகளின் இணைப்பு முயற்சி. அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை ஒழுங்கு செய்து மற்றவர்களின் இணைப்பில் தங்களின் இருப்பை உறுதி செய்ய முயற்சித்தார் அவர். மற்றவர்கள், இந்த இணைப்பால் தங்கள் கட்சிகளுக்கு, மக்கள் மத்தியில் இன்று இருக்கும் ஓரளவான ஆதரவும் குறைந்துவிடும் என்று அஞ்சி, பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என மெல்ல நழுவிவிட்டார்கள். அதனால் அடைக்கலநாதனின் நிலை 'திரிசங்கு சொர்க்கமாகி' இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ அடைக்கலத்தைத் தவிர வேறு வழியில்லை போல...**

**7. கேள்வி:-** இலங்கைக் கடற்பரப்பில் இன்னொரு கப்பலும் எரியப் பார்த்ததே?

**பதில்:-** கடவுள்தான் காத்தார். இல்லாவிட்டால் கப்பல் மூழ்கியிருக்குமோ என்னமோ, இன்றைய ஆட்சி மூழ்கியிருக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ கப்பல் தப்பியதா? கடல் தப்பியதா?**

**8. கேள்வி:-** உரத்தட்டுப்பாடு




பிரச்சினை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** நோக்கம் சரி என்றே படுகிறது. காலமும் வலியும் அறியாமல் செயல்படுத்தியதில்தான் தவறு இருப்பதாய் நினைக்கிறேன். இந்த ஆண்டுக்கான உரம் கையிருப்பில் இருப்பதாய் நினைத்ததாகவும் அதில் தவறு நேர்ந்துவிட்டதாகவும் கூறி அமைச்சர் அதற்காக விவசாயிகளிடம் மன்னிப்புக் கோருகிறார். அரச நிர்வாக ஓட்டைகள் வரவரப் பெரிதாவதையே அமைச்சரின் மன்னிப்பு எடுத்துக் காட்டுகிறது.

உண்மையில் இயற்கை உரம் மனிதருக்கும் மண்ணுக்கும் நல்லதுதான் (நான் சீனர்களின் கழிவைச் சொல்லவில்லை). அதை நம்பித்தான் முன்பு நம் விவசாயிகள் வாழ்ந்தார்கள். அதனால் இலை, குழைகளுக்காக மரங்களையும், எருவுக்காக ஆடு, மாடுகளையும் வளர்த்தார்கள். அம் முயற்சிகளால் வளிமண்டலம் சுத்தமானது. விலங்குகளால் கிடைக்கும் பால் முதலிய பயனும் மக்களைப் பலப்படுத்தியது. விலங்குகளின் எருக்களால் பயிர்கள் வளர்ந்தன. பயிர்களின் தழைகளால் விலங்குகள் வளர்ந்தன.

இன்று செயற்கை உரம் வந்ததும், விவசாயிகளிடம் மரங்களை வளர்க்கும் ஆர்வமும் ஆடு, மாடுகளை வளர்க்கும் ஆர்வமும் குறைந்துவிட்டது. இருக்கும் மரங்களின் இலை தழைகளையும் விவசாயிகள் சேமித்துப் பயன்படுத்த நினைப்பதில்லை. ஆடு, மாடுகளை வளர்க்காததால் நெல்லிலிருந்து கிடைக்கும் வைக்கோலை எல்லாம் வயலிலேயே போட்டுக் கொளுத்துகிறார்கள். அதனால் மேலும் வளி மாசடைகிறது. உடன் பயன்தரும் செயற்கை உரங்களால் நிலத்தின் அமில, காரத் தன்மைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இதனால் விரைவில் நம் நிலங்கள் எல்லாம் 'மலடாய்ப்' போகப் போகின்றன.

நம் விவசாயிகளும், மண்ணைப் பற்றியும் மக்களைப் பற்றியும் நினைக்காமல், விரைவில் கிடைக்கக்கூடிய அதிக இலாபம் பற்றியே நினைக்கிறார்கள். அதனால் இயற்கை உர முறை மீண்டும் வருவது மக்களுக்கும் மண்ணுக்கும் நல்லதேயாம்.

இயற்கை உரப்பாவனையில், ஓராண்டில் இடப்படும் இயற்கை உரம் மண்ணை வளம்படுத்த இரண்டாண்டுகளாவது செல்லும். அந்த இரண்டாண்டு கால விளைச்சல் பற்றி அரசு திட்டமிட்டிருக்க வேண்டும். வேறு திட்டங்கள் கைவசம் இல்லையெனின் அந்த இரண்டாண்டுகளுக்கு விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கும் ஆயத்தமாவது செய்திருக்க வேண்டும். இவை எதனையும் பற்றிச் சிந்திக்காமல் இத்திட்டத்தைக் கொண்டு வந்தது தான் தவறு. மற்றும்படிக்கு இயற்கை உரப் பாவனைத் திட்டத்திற்கு நான் ஆதரவளிக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'சுப்பர்' - விவசாய வாரிதியார்.**

காலைக்கதிர் Kalaikkathir

# எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவித தேவையும் எமக்குக் கிடையாது

## அனைத்து சிறு கட்சிகளையும் இணைத்தே தேர்தல் சீர்திருத்தம் அணுகப்படும் என்கிறார் மனோ

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கூட்டுச் செயற்பாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட உடன்படும் அனைத்து சிறு கட்சிகளும் இணைத்துக்கொள்ளப்படும். எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவித தேவையும் கிடையாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டமையால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் அழைக்கப்படவில்லை. மேலும், இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை, பொது நன்மை கருத்தை தாமும் ஆதரிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் உறுதியளித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறு கட்சிகளின் தேர்தல் சீர்திருத்த பேச்சில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏன் அழைக்கப்படவில்லை என்ற சர்ச்சை தொடர்பில் கருத்துக் கூறிய மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இன ரீதியான சிறு கட்சிகளும், அரசியல் ரீதியான சிறு கட்சிகளும் தேர்தல் சீர்திருத்தம் என்ற பொதுப் பிரச்சினையைக் கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நண்பர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியுடன் பேசுகின்ற அதேவேளை, நானும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பியுடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இன்றைய விகிதாசார முறைமையே எமது பொது நிலைப்பாடு என நாம் அவருக்குக் கூறியபோது, சஜித் பிரேம தாஸ எம்.பி., தான் இன்றைய விகிதா சார முறைமைக்கு முழு ஆதரவு தருவ தாக எமக்கு உறுதியளித்துள்ளார். இது தொடர்பாகதமது கட்சி பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்பியை அழைத்து அறிவுறுத்தல் வழங்கினார்.

அதேபோல், தேர்தல் சீர்திருத்த பேச்சு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுடனும் நான் நேரடியாகப் பல முறை பேசியுள்ளேன். வடக்கு மாகாணத்தில் புதிய கலப்பு முறைமை தமக்குச் சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகள் இருந்தாலும், நாடு முழுக்க சிதறி வாழும், தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தாமும் இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை ஆதரிக்கத் தயார் என கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. என்னிடம் உறுதியளித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களும் இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர் என்று நான் அறிந்துள்ளேன் - என்றார்



# 60 தமிழ் அரசியல் கைதிகளின் விவரம் அடங்கிய கடிதங்கள் 225 எம்.பிக்களுக்கும் அனுப்பிவைப்பு

(இ.கலையமுதன்)

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 60 பேரின் விவரங்கள் அடங்கிய கடிதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குரலற்றவர்களின் குரல் அமைப்பால் இந்த கடிதங்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். பிரதான தபாலகத்திலிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இதன்பின்னர் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது:-

அண்மையில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதனை நாங்கள் வரவேற்கிறோம். இது அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தொடக்கப் புள்ளியாக அமையும். அதே நேரம் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிரு க்கின்ற ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அப்படி ஒரு சம்பவத்தை நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

11 வருடங்கள் தொடங்கி 26 வருடங்களாக சிறையில் இருக்கும் சிறையிலுள்ள 60 தமிழ் அரசியல் கைதிகளின் பெயர், தண்டனை விபரங்கள், வழக்கு விவரங்கள் போன்ற சகல விவரங்களும் உள்ளடக்கிய கோவையை, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாங்கள் அனுப்பி வைத்துள்ளோம் .

விரைவாக அவர்களின் விடுதலை செய்தியை எதிர்பார்த்து இருக்கின்றோம். அந்தவகையில் ,அவர்களுடைய பெற்றோரும் எதிர்பார்ப்புடன் நம்பிக் கையுடன் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். நாடாளுமன்றத்திலே கூறப்பட்ட அந்த விடயங்கள் விரைவாக நடைபெற வேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

முன்னுக்குப் பின் முரணாக பல மாறுபட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. 60 பேர் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். அந்த விவரங்களை நாம் இன்று நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். அண்மைக்காலத்தில் கைது செய்யப்பட்ட வர்கள் உடைய விவரங்களை நாங்கள் தற்போது தயாரித்துக் கொண்டிருக்கின் றோம்.

விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம், சுமந்திரன் மீதான கொலை முயற்சி காரணமாக கைதுசெய்யப்பட்டவர்களின் விவரங்களையும் நாங்கள் சேகரித்து வருகின்றோம். அவர்களும் விடுவிக்கப் பட வேண்டும்.

கடந்த காலம் தொட்டு விடுதலை




என்று வருகின்றபோது அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டவர்களை அவ்வாறே சிறையில் முடக்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் அரசியல் கைதிகள் விடயத்தில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

2009 இற்குப் பின்னர் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட்டனர். அந்தக் காலப்பகுதியில் சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் இருந்தனர். ஆனால், இன்றைக்கும் அந்த அரசியல் கைதிகள் அப்படியே தேக்க நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றார்கள். 25 வருடங்களாக அவர்கள் இருக்கின்றார்கள். வயதானவர்கள் கூட அவர்களில் உள்ளனர். அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

# மேலும் சில இடங்கள் தனிமைப்படுத்தலில்

நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் இன்று காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 5 பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத் தப்பட்டுள்ளன.

அதேவேளை, கம்பஹா மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுவாகல தோட்டத்தின் மேற்பிரிவு, கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தலை வடக்கு கிராம சேவகர் பிரிவின் ஓலந்த கிராமம் மற்றும் வத்த தோட்டம், கொழும்பு மாவட்டத்தின் நுகேகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒபேசேகரபுர (514 சி) கிராம சேவகர் பிரிவு, நுவரெலியா மாவட்டத்தின் பொக வந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல தோட்டத்தின் கீழ்ப் பிரிவு ஆகிய பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிஹேன கிராம சேவகர் பிரிவின் பொல்ஹேன வீதி, லேக்வீவ் வீதி, முதலீட்டு சபை வீதி (வாவி வீதி சந்திவரையான பகுதி) தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே அம்மாவட்டத்தின் மீகஹ வத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சியாம் பலாபே கிராம சேவகர் பிரிவின் தேவாலய வீதி, ஆரியதாச விதானகே மாவத்தை, ஆரியதாச விதானகே மாவத்தையின் முடிவிடம், சியம்பலாபேவத்த கந்துபொட வீதி ஆகிய பகுதிகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தின் மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெமதஓய (ஈ-417/ஏ) கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் இராணு வத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 1,737 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

நாட்டில் கொரோனாவைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,737 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 62 ஆயிரத்து 709 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 29 ஆயிரத்து 541 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 11 ஆக அதிகரித்துள்ளது.

# மேலும் 37 பேர் மரணம் கொரோனா காவு 3,157

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 25 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயிரிழந்த ஆண்களில் ஒருவர் 30 வயதுக்கு மேற்பட்டவர். ஐவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். 19 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். அதேவேளை, பெண்களில் மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். ஒன்பது பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 157 ஆக அதிகரித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622